இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 146 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 20 – வெள்ளிக்கிழமை 05 ஜனவரி 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 146 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 20 - Friday 05 January 2024 - Madurai 12 Pages ₹ 5.00





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2024) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் போட்டிகளை உணர்ந்தும், தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்களின் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்திடவும் தயாரிக்கப்பட்டுள்ள “தென்னை நார் கொள்கை 2024”–யை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் / தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் எல்.நிர்மல்ராஜ், தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவன முதன்மை செயல் அலுவலர் முனைவர் இரா. கண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

### வருகிற 7 மற்றும் 8ஆம் தேதிகளில் - சென்னையில் நடைபெற உள்ள

# உலக முதலீட்டாளர்கள் மாநாடு!

## தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார்!

**சென்னை, ஜன. 5-**

**சென்னையில் வரும் 7 மற்றும் 8ஆம் தேதிகளில் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாடு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று ஆலோசனை நடத்தினார்.**

2030ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு லட்சம் கோடி டாலர்களாக மாற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இலக்கு நிர்ணயித்துள்ளார். புதிய முதலீடுகளை ஈர்க்க வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு முதலீட்டாளர்களுக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில், ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கின் ஒரு பகுதியாக, வரும் 7 மற்றும் 8ம் தேதிகளில் சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுகிறது.

வெளிநாட்டு நிறுவனங்கள், உள்நாட்டு நிறுவனங்கள், மாணவர்கள், கண்காட்சி அமைப்பாளர்கள் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கு தமிழ்நாடு அரசு தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இந்நிலையில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனை நடத்தினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா, தொழில் துறை செயலாளர் அருண் ராய் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு செழிக்க, தமிழ்நாட்டில் முதலீடு செய்யுமாறு, முதலீட்டாளர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

### தென்னை நார் தொழில் துறையில் புதிய சகாப்தமாக – நிலையான

# வளர்ச்சிக்கு வழிவகுக்கும் “தென்னை நார்க் கொள்கை 2024!”

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, ஜன. 5–**

**தமிழ்நாட்டில் தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்களின் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக “தென்னை நார் கொள்கை 2024” – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2024) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் போட்டிகளை உணர்ந்தும், தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்களின் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்திடவும் தயாரிக்கப்பட்டுள்ள “தென்னை நார் கொள்கை 2024” யை வெளியிட்டார்.

தென்னை நார் கொள்கையானது, தென்னை நார் தொழில் நிறுவனங்களின் தேவைகளை நிறைவேற்றுவது, அந்நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உறுதி செய்வது மற்றும் தொழிற் நிறுவன சங்கங்களின் கருத்துக்களை கேட்டறிந்து அதன்படி நடவடிக்கை மேற்கொண்டு இத்துறையின் வளர்ச்சியில் முதலீடு செய்த அனைத்து பங்குதாரர்களையும் பயன்பெறச் செய்வது ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும். இக்கூட்டு அணுகுமுறையானது, இத்தொழில்துறையின் தேவைகளை நிறைவேற்றுவது மற்றும் அதன் முன்னேற்ற இலக்கை அடைவதற்கான தீர்வுகளை வழங்குவதையும் உறுதி செய்கிறது.

**தென்னை நார் தொழில் கொள்கையின் முக்கிய சிறப்பம்சங்கள்**

**முன்னிருத்தலை ஊக்குவித்தல்:** உலகத் தரத்திலான மதிப்பு கூட்டப்பட்ட தென்னை நார் பொருட்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க, தென்னை நார் துகள் மற்றும் தென்னை நார் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களுக்கான அதிநவீன ஆய்வகம் நிறுவப்படும். தென்னை நார் தொழிலில் நிலையான, சுற்றுச்சூழல் நட்புடன் கூடிய மதிப்பு கூட்டப்பட்ட நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு தென்னை நார் கொள்கை முன்னுரிமை அளிக்கிறது.

**சிறப்பு மையங்கள்:** தென்னை நார் துகள் மற்றும் தென்னை நார் சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களுக்காக பிரத்யேகமான சிறப்பு மையங்களை உருவாக்குவது தென்னை நார் கொள்கையின் நோக்கமாகும். இம்மையங்கள் புதிய மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளுக்கான ஆராய்ச்சி, விவசாயம் மற்றும் தோட்டக்கலையில் மண்ணில்லா வளர்ப்பு ஊடக பயன்பாடு, புத்தொழில்கள் மற்றும் புதிய மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் பயன்பாடு, தென்னை நார் சார்ந்த தொழில்களின் போட்டித்தன்மை ஆகியவற்றை மேம்படுத்தும்.

**சந்தை விரிவாக்கம்:** உள்நாடு மற்றும் சர்வதேச அளவில் சந்தையை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் வகுக்கப்படும். உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தை வாய்ப்புகளுக்காக தென்னை நார் சார்ந்த நிறுவனங்கள் வர்த்தக கண்காட்சிகளில் பங்கு பெறுவதை உறுதி செய்தல், சமச்சீர் தொழில்மயமாக்கல், சமூக சமபங்கு, சுழற் பொருளாதார நடைமுறைகள், சுற்றுச்சூழலுக்கு உகந்த ஏற்றுமதி வாய்ப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் அரசு திட்டங்களில் புவி விரிப்பு போர்வை (Geo Textiles) போன்ற தென்னை நார் பொருட்களின் பங்களிப்பின் வாயிலாக சந்தை விரிவாக்கத்தை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**உள்கட்டமைப்பு மேம்பாடு:** தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை வழங்கிட கிடங்குகளை நிறுவுதல் மற்றும் குழும மேம்பாடு ஆகியவை தென்னை நார் சார்ந்த தொழில்களின் வளர்ச்சிப் பாதையை மேம்படுத்தும்.

**போட்டித்தன்மை மற்றும் தரக் கட்டுப்பாடு:** தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துதல், மதிப்புக்கூட்டல் மற்றும் ஏற்றுமதி வணிக மேம்பாட்டிற்கான கருத்துப்பட்டறைகள் மற்றும் பயிற்சிகள் உள்ளிட்ட பல்வேறு வழிகள் மூலம் மேம்படுத்தப்பட்ட போட்டித்தன்மையை இந்தக் கொள்கை ஊக்குவிக்கிறது. ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் புதிய தென்னை நார் சார்ந்த பொருட்களின் உற்பத்தியை விரைவாக மேம்படுத்த இக்கொள்கை வழிவகுக்கும்.

**முதலீட்டு ஈர்ப்பு:** ஒற்றைச் சாளர முறை மற்றும் தொழில் முதலீட்டாளர்க்கான உகந்த சூழ்நிலை ஆகியவற்றின் மூலம் தென்னை நார் சார்ந்த தொழிலில் புதிய முதலீடுகளை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டு, தேசிய மற்றும் சர்வதேச வர்த்தக அமைப்புகளுடன் கூட்டாண்மைக்கான அடித்தளத்தை இந்தக் கொள்கை அமைக்கிறது. இம்முயற்சிகள் தென்னை நார் சார்ந்த தொழில்களின் வளர்ச்சிக்கு புதிய வழிகளையும், உலகளாவிய அறிதல் ஆகியவற்றை முன்னெடுக்கும்.

தென்னை நார் சார்ந்த தொழில் துறையில் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கி முன்னேற தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், இந்தக் கொள்கையானது கிராமப்புற பொருளாதார முன்னேற்றம், மகளிர் வேலைவாய்ப்பு, தென்னை விவசாயிகளுக்கான வருமானத்தினை அதிகரித்தல் புதுமை, போட்டித்திறன் மற்றும் பொறுப்புடன் கூடிய நிலையான வளர்ச்சி மூலம் புதிய சகாப்தத்தை அடைய வழிகோலுகிறது.

இந்நிகழ்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் / தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் எல்.நிர்மல்ராஜ், தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவன முதன்மை செயல் அலுவலர் முனைவர் இரா. கண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.


**தென்னை நார் சார்ந்த தொழில் துறையில் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கி முன்னேற தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், இந்தக் கொள்கையானது கிராமப்புற பொருளாதார முன்னேற்றம், மகளிர் வேலைவாய்ப்பு, தென்னை விவசாயிகளுக்கான வருமானத்தினை அதிகரித்தல் புதுமை, போட்டித்திறன் மற்றும் பொறுப்புடன் கூடிய நிலையான வளர்ச்சி மூலம் புதிய சகாப்தத்தை அடைய வழிகோலுகிறது.**


### பா.ஜ.க. மிரட்டிப் பார்க்கிறது!

# அமலாக்கத்துறை சம்மன் சட்ட விரோதம்!

## டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஜன. 5-*

*நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குவதால், அமலாக்கத்துறை மூலம் பா.ஜ.க. தன்னை மிரட்டுவதாக டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் குற்றச்சாட்டியுள்ளார். மதுபானக் கொள்கை மாற்ற வழக்கில் அமலாக்கத்துறை தனக்கு அனுப்பியுள்ள சம்மன் சட்டவிரோதமானது என்றும் அவர் புகார் தெரிவித்துள்ளார்.*

*டெல்லியில் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி கட்சியின் ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்நிலையில், டெல்லியில் மதுபானக் கொள்கை முறைகேட்டில் ஈடுபட்டதாக ஆட்சியாளர்கள் மீது குற்றம்சாட்டி, அமலாக்கத் துறை வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது. ஆனால், இந்த குற்றச்சாட்டை ஆம் ஆத்மி அரசு திட்டவட்டமாக மறுத்து வருகிறது. இருப்பினும், துணை முதலமைச்சராக இருந்த மணிஷ் சிசோடியா மற்றும் அமைச்சராக இருந்த சஞ்சய் சிங் ஆகியோரை அமலாக்கத்துறை கைது செய்தது.*

*மேலும், இந்த வழக்கில் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க முதலமைச்சர் கெஜ்ரிவாலுக்கு அமலாக்கத் துறை 3 முறை சம்மன் அனுப்பியது. ஆனால், இது அரசியல் பழிவாங்கும் நோக்கோடு போடப்பட்டுள்ள வழக்கு என்று கூறி, கெஜ்ரிவால் விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்து வருகிறார். இந்நிலையில், நேற்றே ஆஜராகுமாறு முதலமைச்சர் கெஜ்ரிவாலுக்கு 4வது முறையாக சம்மன் அனுப்பிவிட்டு, ஒரு வேளை ஆஜராகாவிட்டால் அவரை கைது செய்ய அமலாக்கத்துறை திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் டெல்லியில் உள்ள கெஜ்ரிவால் வீட்டைச் சுற்றிலும் அதிகளவிலான போலீசார் குவிக்கப்பட்டுள்ளதால் அங்கு பரபரப்பு நிலவுகிறது.*

*இந்நிலையில், அரவிந்த் கெஜ்ரிவால் வெளியிட்டுள்ள வீடியோவில்,*

*அமலாக்கத்துறை மூலம் தம்மை பா.ஜ.க., மிரட்டுகிறது என்று குற்றம் சாட்டியுள்ளார். அமலாக்கத்துறையின் சம்மன் சட்ட விரோதமானவை, பொய்யானவை என்று தாம் தெரிவித்து வரும் நிலையில், அதற்கு உரிய விளக்கம் அளிக்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குவதால், அமலாக்கத்துறை மூலம் ஒன்றிய பா.ஜ.க., அரசு தம்மை மிரட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார். சி.பி.ஐ., அமலாக்கத்துறை மூலம் மிரட்டி என்னை கைது செய்ய பா.ஜ.க. முயற்சிக்கிறது என்று கூறிய அரவிந்த் கெஜ்ரிவால், பா.ஜ.க.,வினர் மீதான ஊழல் புகாரில் சி.பி.ஐ., அமலாக்கத்துறை ஏன் விசாரணை நடத்துவதில்லை? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.*

*மதுபானக் கொள்கையில் நாங்கள் எந்த தவறும் செய்யவில்லை என்று தெரிவித்துள்ள அவர், பா.ஜ.க.,வில் சேராதவர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று விமர்சித்தார். நேர்மை மட்டுமே தம்முடைய சொத்து என்று கெஜ்ரிவால் தெரிவித்தார்.*

### மக்களவை தேர்தல் வியூகம் குறித்து

# காங்கிரஸ் கட்சியினர் டெல்லியில் ஆலோசனை!

## மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்!

*புதுடெல்லி, ஜன. 5 -*

*மக்களவை தேர்தல் வியூகம் மற்றும் தேர்தல் பிரச்சார பணிகள் குறித்து காங்கிரஸ் கட்சியினர் டெல்லியில் ஆலோசனை நடத்தினர்.*

*மக்களவை தேர்தல் வரும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைபெறவுள்ள நிலையில், அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளை துரிதப்படுத்தியுள்ளன. இந்நிலையில், மக்களவை தேர்தல் வியூகம் மற்றும் தேர்தல் பிரச்சார பணிகள் குறித்து காங்கிரஸ் கட்சி நேற்று ஆலோசனை நடத்தியது.*

*காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் பொதுச் செயலாளர்கள், மாநிலப் பொறுப்பாளர்கள், மாநில தலைவர்கள், சட்டமன்ற கட்சி தலைவர்களின் கூட்டம் நேற்று டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.*

*காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவரும், எம்.பி.,யுமான ராகுல் காந்தி, பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.*

*இந்நிலையில், ராகுல் காந்தியின் பாரத் நியாயா நடைபயணம் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.*

### புதிய பேருந்து நிலையமான

# கிளாம்பாக்கத்திற்கு புதிய ரயில் நிலையம்!

## தமிழ்நாடு அரசு ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு!

சென்னை, ஜன. 5 –

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக கிளாம்பாக்கத்தில் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் பேருந்து முனையத்துக்கு பயணிகள் செல்ல வசதியாக அங்கு புதிய ரயில் நிலையம் அமைக்க முதற்கட்டமாக 20 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

பிரம்மாண்டமாக கட்டப்பட்டிருக்கும் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்துக்கு செல்ல கூடுதல் இணைப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் தாம்பரம் செங்கல்பட்டு வழித்தடத்தில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் அருகே புறநகர் ரெயில் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தமிழ்நாடு அரசு தெரிவித்தது. கடந்த அக்டோபர் மாதம் வண்டலூர் ஊரப்பாக்கம் இடையே கிளாம்பாக்கத்தில் புதிய ரெயில் நிலையம் அமைப்பதற்கு தெற்கு ரெயில்வே டெண்டர் கோரியது.

இந்த நிலையில், கிளாம்பாக்கத்தில் புதிய ரெயில் நிலையம் அமைக்க சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமான சி.எம்.டி.ஏ. சார்பில் முதற்கட்டமாக 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதிய ரயில் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்க தெற்கு ரெயில்வேயிடம் சி.எம்.டி.ஏ. கோரிக்கை விடுத்துள்ளது. இந்த ரெயில் நிலையம் புறநகர் மின்சார ரெயில்கள் நின்று செல்லும் வகையில், 3 நடைமேடைகளுடன் அமைய உள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 05-01-2024

# மீண்டும் மணிப்பூர்

2023ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் தேதி அன்று தொடங்கியது, மணிப்பூர் மாநிலத்தில் வன்முறை. சில மாதங்களுக்கு முன்னால் லேசாக அடங்கி இருந்தது. இதோ 2024 ஆம் ஆண்டும் தொடங்கிவிட்டது.

கடந்த டிசம்பர் 25ஆம் தேதி காலையில் மணிப்பூர் மாநிலத்தில் குக்கி இன மக்கள் அதிகம் வாழும் காங்போக்பி மாவட்டத்தில் ஜூபி எனும் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடந்தது. இந்த துப்பாக்கிச் சூட்டில் 21 வயது இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். புத்தாண்டு தினமான ஜனவரி 1 ஆம் தேதியன்றும் துப்பாக்கிச் சூடு தொடர்ந்துள்ளது. இதில் 3 பேர் கொல்லப்பட்டார்கள். ஐந்து பேர் காயம் அடைந்துள்ளனர். தௌபால், இம்பால் கிழக்கு, இம்பால் மேற்கு, காக்சிங், பிஷ்னுபூர் ஆகிய மாவட்டங்களில் மீண்டும் ஊரடங்கு போடப்பட்டுள்ளது.

**எட்டு மாதங்களாக எரிகிறது மணிப்பூர். 2024 ஆம் ஆண்டும் தொடங்கி விட்டது என்பதுதான் வேதனைக்குரியது ஆகும். எட்டு மாதங்களில் ஒரே ஒரு நாள்கூட பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், மணிப்பூர் செல்லவில்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து ஆறுதல் சொல்லவில்லை. அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி 180 பேர் இறந்துள்ளார்கள். எவரொருவர் வீட்டுக்கும் பிரதமர் செல்லவில்லை. உள்துறை அமைச்சர் அமித்ஷா மூன்றே மூன்று நாட்கள்தான் இருந்தார். ஒப்புக்கு! கணக்குக் காட்ட மட்டும்!**

**மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசின் கையாலாகாத்தனத்தை இது வெளிப் படுத்துகிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் அலட்சியத்தையும், மெத்தனத்தையும் இது வெளிப் படுத்துகிறது. பிரதமர் மோடி - உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரது திறமையின்மையின் சாட்சியாக இருக்கிறது மணிப்பூர். அந்த மாநிலத்தின் முதலமைச்சரான பிரேன்சிங்கைக் கூட அவர்களால் மாற்ற முடியவில்லை. பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்களே, பா.ஜ.க. தலைமைக்கு எதிராகக் கருத்துச் சொன்ன பிறகும், அதனை பா.ஜ.க. தலைமையால் செய்ய முடியவில்லை.**

அதிகமான நாட்கள் இணையத் தடைகள் விதித்த மாநிலமாக காஷ்மீருக்கு அடுத்தபடியாக மணிப்பூர் மாறியது. இதனால் அப்பகுதியில் நடக்கும் பல வன்முறைகள் மற்றும் பெண்கள் மீதான வன்கொடுமைகள் வெளியே வராமல் மறைக்கப் பட்டுள்ளது.

இறந்தவர் உடல்களை வாங்க, உரிமைகோர ஆட்கள் வரவில்லை. இது தான் துயரங்களிலும் துயரம் ஆகும். வன்முறையில் இறந்த 96 பேரின் உடல்கள் இம்பாலில் உள்ள மாநில மருத்துவக் கல்லூரி, ஜவஹர்லால் நேரு மருத்துவக் கல்லூரி மற்றும் சுராசந்த்பூரில் உள்ள மருத்துவமனையில் அப்படியே இருக்கின்றன. இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் உடல்களை அடையாளம் காண மருத்துவமனை சவக்கிடங்கிற்குச் சென்று நேரில் பார்வையிட வேண்டும். ஆனால் இப்போது மக்கள் அங்கு செல்ல முடியாததால் இந்த உடல்கள் பல மாதங்களாக அடையாளம் காணப்படாமல் இருக்கின்றன.

இரண்டு பெண்கள் நிர்வாணமாக அழைத்துச் செல்லப்பட்டார்களே! அவர்கள் என்ன ஆனார்கள்? என்பதை சமீபத்தில் பி.பி.சி. செய்தி நிறுவனம் கட்டுரையாக்கி வெளியிட்டு இருந்தது. “நான் முன்பு வாழ்ந்ததைப் போல என்னால் மீண்டும் வாழ முடியும் என்று நான் நினைக்கவில்லை. வீட்டை விட்டு வெளியேறுவது எனக்கு கடினமாக உள்ளது, மக்களைச் சந்திப்பதற்கு பயமாகவும் வெட்கமாகவும் இருக்கிறது. கூட்டத்தைப் பார்த்தாலே பயமாக இருக்கிறது. இனி எந்தப் பெண்ணுக்கும் இப்படி நடக்கக் கூடாது” என்று அந்தப் பெண்கள் சொல்லி இருக்கிறார்கள். இதில் ஒருவர் கல்லூரி மாணவி. இனி கல்லூரிக்கும் செல்ல முடியாது, அனைவரிடமும் பேச முடியாது என்று சொல்லி இருக்கிறார். அதாவது அந்த இரண்டு பெண்களைக்கூட மன அளவில் பா.ஜ.க. அரசுகளால் மீட்க முடியவில்லை.

மே மாதம் அவர்கள் நிர்வாணம் ஆக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவர்களை அப்படி அழைத்துச் செல்வதை காவலர்களே கைகட்டி வேடிக்கை பார்த்தார்கள். அந்தப் பெண்கள் இரண்டு வாரத்தில் புகார் கொடுத்தார்கள். மே, சூன், சூலை வரை எந்த நடவடிக்கையும் இல்லை. சூலையில் நிர்வாணமாக அழைத்துச் செல்லும் காட்சி வீடியோக்கள் வெளியானது. அதன் பிறகுதான் மணிப்பூரைத் தாண்டி வெளியில் தெரிந்தது. முதன்முதலாக மூன்று மாதம் கழித்து பிரதமர் நரேந்திரமோடி, மணிப்பூர் பற்றி வாய்திறந்து கருத்துச் சொன்னார்.

இரண்டுவழக்குகளைப்பதிவுசெய்துள்ளது சி.பி.ஐ. இருகுற்றப்பத்திரிக்கைகளை கவுஹாத்தி சி.பி.ஐ., சிறப்பு குற்றவியல் நீதிமன்றத்தில் கடந்த செப்டம்பர் தாக்கல் செய்தது சி.பி.ஐ. அவ்வளவுதான்!

கடந்த நவம்பர் மாதம்தான் 9 மைத்தி இனக்குழு அமைப்புகளுக்கு ஆளும் பா.ஜ.க. அரசு 5 ஆண்டுகளுக்குத் தடை விதித்தது. மக்கள் விடுதலை ராணுவம் (PLA), புரட்சிகர மக்கள் முன்னணி (RPF), ஐக்கிய விடுதலை முன்னணி (UNLF), மணிப்பூர் மக்கள் ராணுவம் (MPA), காங்லீய்பக் மக்கள் புரட்சிகர கட்சி (PREPAK), காங்லீய்பக் கம்யூனிஸ்ட் கட்சி (KCP), கே.ஒய்.கே.எல்., கோர்கோம், ஏ.எஸ்.யு.கே - ஆகிய 9 அமைப்புகளை ஒன்றிய அரசு தடை செய்தது.

இவர்கள் இன்னமும் மணிப்பூர் பிரச்சினையின் உண்மையான காரணத்தைச் சொல்ல விரும்பவில்லை. ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், வழக்கம் போல் இது அன்னியச் சதி என்ற பல்லவியைப் பாடுகிறார். “மணிப்பூர் ஒரு எல்லைப்புற மாநிலம். மணிப்பூர் வன்முறையில் எல்லை தாண்டிய தீவிரவாதிகள் ஈடுபட்டிருக்கின்றனர்” என்று சொல்லி இருக்கிறார். எல்லாவற்றுக்கும், வெளிப்புறச் சதிதான் இவர்களுக்குத் தெரிந்த ஒரே காரணம்.

மிசோரம் மாநிலத்தில் பா.ஜ.க. அடைந்த தோல்வியை, மணிப்பூர் மாநில வன்முறைக்குக் கிடைத்த தண்டனையாகவே பார்க்க வேண்டும். அந்த மாநிலத்தில் ஆளும் கட்சியாக இருந்தது மிசோ தேசிய முன்னணி. பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சி இது. பிரதமர் நரேந்திர மோடியுடன் இணைந்து பிரச்சார மேடையில் ஏற மாட்டேன் என்று முதலமைச்சர் ஜோரம் தங்கா சொன்னார். இந்நிலையில் மொத்தமுள்ள 40 இடங்களில் பா.ஜ.க. 23 இடங்களில் மட்டும் போட்டியிட்டது. தேர்தல் முடிவுகளின் படி ஆளும் மிசோ தேசிய முன்னணி 40 இடங்களில் 10 இடங்களில் மட்டுமே வென்றது. 23 இடத்தில் போட்டியிட்ட பா.ஜ.க. 2 இடங்களில் மட்டுமே வென்றது. ஜோரம் மக்கள் இயக்கம் என்ற கட்சி 27 தொகுதிகளைக் கைப்பற்றி ஆட்சியைப் பிடித்தது. மணிப்பூர் பிரச்சினையை சரியாகக் கையாளாததால் பா.ஜ.க. இங்கு தோல்வியைத் தழுவியது. பா.ஜ.க.வுடன் தேர்தலுக்கு முன்பு வரை இருந்த மிசோ தேசிய முன்னணி ஆளும் தகுதியை இழந்தது.

**தகுதியற்றவர்களால் ஆளப்பட்டால் மக்கள் உடலும் மனமும் எரிந்து கொண்டே இருக்கத்தான் வேண்டும் என்பதற்கு மணிப்பூர் சாட்சியாக அமைந்திருக்கிறது.**

“முத்தமிழறிஞர் பதிப்பகத்தை”த் தொடங்கி - விழாவில்

# நானும் ஒரு பதிப்பாளராகக் கலந்து கொண்டிருக்கிறேன்!

## 47-வது புத்தகக் காட்சியைத் தொடங்கி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!






இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (03.01.2024) சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில், 47-வது சென்னை புத்தகக் காட்சி 2024-ஐ தொடங்கி வைத்தார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் லியோனி, நக்கீரன் கோபால், தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் தலைவர் சேது சொக்கலிங்கம், செயலாளர் எஸ்.கே.முருகன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

**சென்னை,ஜன.5-**

**“முத்தமிழறிஞர் பதிப்பகத்தைத் தொடங்கி நானும் ஒரு பதிப்பாளராக இந்த விழாவில் பங்கேற்றிருக்கிறேன்” என்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 47-வது புத்தகக் காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றும் போது கூறினார்.**

சென்னை, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் 47வது புத்தகக் காட்சி தொடக்க விழா நேற்று முன்தினம் (புதன்கிழமை) நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புத்தகக் காட்சியைத் தொடங்கி வைத்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

இந்தப் புத்தகக் காட்சி நிகழ்ச்சி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு தொடங்கி வைப்பதாக இருந்தது. அவர் இங்கே கலந்து கொள்ளவில்லை என்றாலும், அவருடையநினைவுமுழுவதும்இந்தநிகழ்ச்சியில்தான் இருக்கும் என்பது உங்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும்.

இந்தப் புத்தகக்காட்சி நிகழ்ச்சிகளில் பல ஆண்டுகளாக நான் தொடர்ந்து கலந்து கொண்டு பல புத்தகங்களையும் வெளியிட்டு இருக்கிறேன். அண்ணன் மா.சு அவர்களின் புத்தகத்தை வெளியிடுவதற்காக, இதே மேடையில் கலந்து கொண்டிருக்கிறேன். ஆனால், முதன்முறையாக இந்தப் புத்தகக் காட்சியைத் திறப்பதற்கான ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. அதற்கு உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

### நானும் ஒரு பதிப்பாளர்!

விருது பெற்ற அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள். இந்த முறை சிறப்பு விருந்தினராக மட்டும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. நானும் ஒரு பதிப்பாளராக இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கிறேன். கலைஞரின் மூத்த பிள்ளை ‘முரசொலி’யில் கடைசிப் பக்கத்தில் பாசறைப் பக்கம் எனும் புதிய பகுதியைக் கடந்த பொங்கல் அன்று ஆரம்பித்தோம்.

‘இலவசமாக எல்லாம் கொடுக்க முடியாது. பேப்பருக்கும், அச்சு மைக்குமான செலவை இளைஞர் அணி நிதியில் இருந்து முரசொலிக்கு செலுத்தச் சொல்லி தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். கழகத்தினுடைய வரலாறைத்தான் அதில் தொடர்ந்து எழுதி வருகிறோம்.

### முத்தமிழறிஞர் பதிப்பகம்!

அதன் தொடர்ச்சியாக ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’ என்று ஒன்றை ஆரம்பித்து, ‘பாசறை பக்க’த்தில் வந்த கட்டுரைகளை ஒன்பது புத்தகங்களாகத் தொகுத்திருக்கிறோம். அவற்றை நேற்று நம்முடைய முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள்தான் வெளியிட்டார்கள்.

புத்தகக் காட்சியின் உள்ளே வந்ததும், ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’ இரண்டாவது ஸ்டால். நீங்கள் அனைவரும் சென்று அந்தப் புத்தகங்களை வாங்குகிறீர்களோ, இல்லையோ அங்கேயே நின்று படித்து விட்டாவது போக வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். நான் ஐந்து மணிக்கு ஒன்றிய பிரதமர் அவர்களைச் சந்திப்பதற்காக டெல்லி செல்கின்றேன்.

### பிரதமருடன் சந்திப்பு!

வேறு எந்தப் பிரச்சினையும் பேசுவதற்காக செல்லவில்லை. ‘கேலோ இந்தியா போட்டிகள்’ முதன்முதலில் தமிழ்நாட்டில் நடத்த அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அதற்கான அழைப்பிதழ் கொடுப்பதற்காகத்தான் செல்கின்றேன்.

காலையில் பத்திரிக்கை நண்பர்கள் எல்லாம், ‘வெறும் அழைப்பிதழ் மட்டும்தான் கொடுக்கப் போகிறீர்களா இல்லை, நிதி கேட்கப் போகிறீர்களா’ என்று கேட்டார்கள். தமிழ்நாட்டுக்காக நிதியும் கேட்பதுதான் நம்முடைய கடமை.”

இவ்வாறு உரையாற்றிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தியையும் வாசித்து அளித்தார்.

முன்னதாக பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியின், கவிஞர் உமா மகேசுவரி, எழுத்தாளர்கள் தமிழ்மகன், அழகிய பெரியவன், நாடகக் கலைகள் வேலு. சரவணன், மொழிபெயர்ப்பாளர் மயிலை பாலு ஆகியோருக்கு இந்த ஆண்டுக்கான முத்தமிழறிஞர் கலைஞர் பொற்கிழி விருதுகளையும், பபாசியின் விருது பெற்றுள்ள பிற படைப்பாளிகளுக்கும் விருதுகளை வழங்கி வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சென்னை மேயர் பிரியா ராஜன், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் லியோனி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, காரம்பாக்கம் கணபதி, பிரபாகரராஜா, சென்னை துணை மேயர் மகேஷ்குமார், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கோபண்ணா, பத்திரிகையாளர் நக்கீரன் கோபால், கவிஞர் மனுஷ்யபுத்திரன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.



## தமிழ்மொழி செழிக்குமானால் தமிழினம் செழிக்கும்!

# தமிழ்மொழியும் இனமும் செழிக்கப் புத்தகங்கள் துணை நிற்கட்டும்!

## 47-வது சென்னை புத்தகக் காட்சி தொடக்க விழாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜன.5–**

**“தமிழ்மொழி செழிக்குமானால் தமிழினம் செழிக்கும்! தமிழ் மொழியும் இனமும் செழிக்கப் புத்தகங்கள் துணை நிற்கட்டும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 47–வது சென்னை புத்தகக் காட்சி தொடக்க விழாவுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**

**சென்னை 47–வது புத்தகக் காட்சி நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை தொடங்கியது. இந்த புத்தகக் காட்சியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றினார்.**

**அப்போது விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் படித்தார்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு :–**

தமிழ்நாட்டின் மிகப்பெரிய அறிவுத் திருவிழாவான சென்னை புத்தகக் காட்சியை நேரில் வந்து தொடங்கி வைக்க இருந்த நிலையில், தவிர்க்க இயலாத காரணங்களால் அது இயலாமல் போனதற்கு வருந்துகிறேன். 47ஆவது சென்னை புத்தகக் காட்சி நிகழ்வு மிகப் பெரும் வெற்றியடையவும் அதிக அளவிலான புத்தகங்கள் விற்பனையாகவும் வாழ்த்துகிறேன்.

இன்னும் சில ஆண்டுகளில் 50ஆவது ஆண்டு புத்தகக் கண்காட்சி நடைபெறப்போகிறது. இது வாசிப்பின் மீதும் அறிவு தேடலின் மீதும் பற்று கொண்டு பகுத்தறிவாலும் முற்போக்குச் சிந்தனையாலும் தமிழ்ச் சமூகம் முன்னோக்கி நடைபோடுவதன் அடையாளம். எனவே அந்தப் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு வரும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கத்துக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**இது ஒரு அறிவுத் தொண்டு!**

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்த சங்கத்தின் தலைவர் கவிதா சொக்கலிங்கம் அவர்களுக்கும் மற்றுமுள்ள பொறுப்பாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

புத்தகம் வெளியிடுவது, பதிப்பிப்பது, விற்பனை செய்வது என்பது மற்றும் ஒரு தொழில் அல்ல. இது அறிவுத்தொண்டு! தமிழாட்சியும் தமிழர்களின் ஆட்சியும் நடைபெறும் நம்முடைய தமிழ்நாட்டில் இத்தகைய அறிவுத் திருவிழாக்கள் தமிழ்த் திருவிழாக்கள் அதிகம் நடக்க வேண்டும்.

அதற்கு ஊக்கமளிக்கும் வகையில்தான் படைப்பாளர்களுக்கு உற்ற தோழராக விளங்கிய தலைவர் கலைஞரின் நூற்றாண்டான இந்த ஆண்டு பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன், உமா மகேசுவரி, தமிழ்மகன், அழகிய பெரியவன், வேலு. சரவணன், மயிலை பாலு ஆகியோர் இந்த ஆண்டுக்கான கலைஞர் பொற்கிழி விருதைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கும் பபாசியின் விருது பெற்றுள்ள பிற படைப்பாளிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்.

வாசிப்புப் பழக்கம் என்பது ஒரு தனிமனிதரின் அறிவுத்திறத்தின் அடையாளம் மட்டுமல்ல, ஒரு சமூகம் – மாநிலம் நாடு எந்த அளவு வளர்ந்துள்ளது என்பதற்கான அடையாளம். அறிவாற்றலை வாழ்நாளெல்லாம் பெற மனிதருக்குத் துணைநிற்கும் புத்தகங்களைப் போற்றுகின்ற அரசாக நமது திராவிட மாடல் அரசு இருக்கிறது.

**அண்ணா - கலைஞர் பெயரில் நூலகங்கள்!**

அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்கள் சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகம் உருவாக்கினார். நாம் மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம் உருவாக்கியுள்ளோம். புத்தகங்கள் மேல் எத்தகைய ஆர்வமும் அக்கறையும் கொண்டவர்கள் நாங்கள் என்பதற்கு இது ஒரு சிறிய எடுத்துக்காட்டு.

தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை, எழுத்தாளர்கள் பிறந்தநாளில் கூட்டங்கள், குறைந்த விலையில் சங்க இலக்கிய நூல்கள் வெளியீடு, திராவிடக் களஞ்சியம் உருவாக்கம், ஊடகவியலாளர்களுக்குக் கலைஞர் எழுதுகோல் விருது, உலகப் பல்கலைக்கழகங்களில் செம்மொழித் தமிழ் இருக்கைகள், நூலகங்களுக்குச் சிற்றிதழ்கள், இலக்கிய மாமணி விருதுகள், உயரிய விருது பெற்ற எழுத்தாளர்களுக்குக் கனவு இல்லம், திசைதோறும் திராவிடம், முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம் என்று ஏராளமான தமிழ்க் காப்புத் திட்டங்களை இன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு பாடநூல் கல்விக் கழகமும் ஏராளமான புத்தகங்களை வெளியிட்டு விற்பனை களத்தில் உயர்ந்து நிற்கிறது.

**சென்னை வர்த்தக மையத்தில் பன்னாட்டு புத்தகக் காட்சி!**

புத்தகம் வாசிக்கும் வழக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்காகச் சென்னை புத்தகக் காட்சியைப் போல தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் கடந்த ஆண்டு முதல் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அடுத்ததாகத் தமிழ்நாடு அரசு எடுத்த மிக முக்கியமான முயற்சி என்பது பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி.

உலகளாவிய அறிவுப் பரிமாற்றத்தை நோக்கமாகக் கொண்டு நமது செழுமையான தமிழ் இலக்கியப் படைப்புகளை உலகம் முழுக்க எடுத்துச் செல்லவும் சிறந்த பன்னாட்டு அறிஞர்கள் மற்றும் எழுத்தாளர்களின் படைப்புகளைப் பெற்று தமிழில் அவற்றை வழங்கவும் நடத்தப்படுகிற இந்தப் பன்னாட்டு புத்தகக் கண்காட்சியில் இந்த ஆண்டு 38 நாடுகள் பங்கேற்க இருக்கின்றன. வருகிற 16, 17, 18 ஆகிய நாட்களில் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் ஆறு கோடி ரூபாய் செலவில் இது நடைபெற இருக்கிறது.

ஆங்கில எழுத்துலகத்தில் இருப்பதைப் போலவே 20 இலக்கிய முகவர்களைப் பயிற்சி கொடுத்து தமிழ்நாடு அரசு உருவாக்கி இருக்கிறது. எழுத்தாளர்களுக்கும் வெளிநாட்டுப் பதிப்பு நிறுவனங்களுக்குமான பாலமாக இந்த இலக்கிய முகவர்கள் இருப்பார்கள்.

**இளைஞர் இலக்கியத் திருவிழாக்கள்!**

தமிழ்ப் படைப்புகள் உலகின் பிற மொழிகளுக்குக் கொண்டு செல்லப்படும். இந்தியாவில் எந்த மொழிக்கும் இப்படி இலக்கிய முகவர்கள் இல்லை என்கிற அளவில் இந்த முயற்சியை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

அதேபோல் கடந்த ஆண்டு தமிழ்நாடு அரசு எடுத்த இன்னொரு மிக முக்கியமான முன்னெடுப்பு என்பது இலக்கியத் திருவிழாக்கள். சென்னை, பொருநை, சிறுவாணி, காவிரி, வைகை என இலக்கியத் திருவிழாக்கள் தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

இளைஞர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் வகையில் இந்த ஆண்டு முதல் இளைஞர் இலக்கியத் திருவிழாவும் நடத்தப்பட இருக்கிறது. இலக்கியம் என்பது இயக்கமாக மாற வேண்டும். மனிதரின் அன்றாட பழக்கமாக வாசிப்புப் பழக்கம் இருக்க வேண்டும். புத்தகங்களைப் பரிமாறிக் கொள்வதை ஒரு இயக்கமாகவே நான் உருவாக்கி இருக்கிறேன்.

எனக்கு அன்பளிப்பாக வழங்கப்படும் புத்தகங்களை கிராமப்புற நூலகங்களுக்கும் வாசக சாலைகளுக்கும் வழங்குவதை நான் வழக்கமாக வைத்துள்ளேன். புத்தகம் வழங்குவது என்பதுதான் அறிவுக்கொடையாக அமையும். புத்தகங்கள் வாங்குகிற பழக்கத்தை, நூலகங்களுக்குச் செல்கிற பழக்கத்தைப் பள்ளிக்காலத்திலேயே மாணவர்களிடம் ஏற்படுத்த வேண்டும். புதிய சிந்தனைகளை கல்லூரி மாணவர்களிடம் உருவாக்க வேண்டும். இது தமிழ்ப்பற்றை, தமிழார்வத்தை, தமிழுணர்ச்சியை, தமிழ் எழுச்சியை உருவாக்கும்.

சின்னச்சாமியும் அரங்கநாதனும் தீக்குளித்தார்கள். சிதம்பரம் இராசேந்திரன் துப்பாக்கிக் குண்டுக்கு மார்பைக் காட்டினார்.

லட்சக்கணக்கான தமிழர்கள் பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்களின் தலைமையில் திருச்சியில் இருந்து சென்னைக்குத் தமிழ்ப்படையாக நடந்து போனார்கள்.

இவையெல்லாம் வேறு எந்த மொழியிலும் இனத்திலும் நாட்டிலும் பார்ப்பது அரிது. இத்தகைய தியாகத்தை இப்போது எதிர்பார்க்கவில்லை. தமிழார்வத்தைத்தான் எதிர்பார்க்கிறோம். இத்தகைய தமிழ் ஆர்வத்தை உருவாக்குபவையாகப் புத்தகக் காட்சிகள் செயல்பட்டு வருகின்றன.

தமிழினம் சிறக்க வேண்டுமானால் தமிழ்மொழி சிறக்க வேண்டும்! தமிழ்மொழி செழிக்குமானால் தமிழினம் செழிக்கும்! தமிழ்மொழியும் இனமும் செழிக்கப் புத்தகங்கள் துணைநிற்கட்டும்! 47ஆவது சென்னை புத்தகக் காட்சி பெரும் வெற்றி அடையட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

---

## மீன்வளம் - மீனவர் நலத்துறை சார்பில் ரூ.134.29 கோடியில்

# 6 புதிய - 4 மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜன. 5 -**

**மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.134.29 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள 6 புதிய மற்றும் 4 மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளங்கள், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் ரூ.11.65 கோடி செலவிலான கட்டடங்கள் - ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2024) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 134 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 புதிய மீன் இறங்குதளங்கள் மற்றும் 4 மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளங்கள், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் 11 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடம், நிருவாகம் மற்றும் கல்வித் தொகுதியின் கூடுதல் கட்டடம் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் டாக்டர் கே.சு.பழனிசாமி, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் என்.பெலிக்ஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2024) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 134 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 புதிய மீன் இறங்குதளங்கள் மற்றும் 4 மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் சார்பில் 11 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடம், நிருவாகம் மற்றும் கல்வித் தொகுதியின் கூடுதல் கட்டடம் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

மீன்வளத்தை பாதுகாத்தல், நிலைக்கத்தக்க மீன்பிடிப்பு, மீன் வளர்ப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல், மீன் உற்பத்தியை அதிகரித்தல், மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், சுகாதாரமான முறையில் கையாளப்படுவதை உறுதி செய்வதற்கும் மீன்பிடித் துறை முகங்கள், மீன் இறங்குதளங்கள், கரையோர வசதிகள், மீன் சந்தைகள் போன்ற நவீன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மீன்பிடி தடைகாலங்களில் மீனவர்களுக்கு நிதியுதவி, மீன்பிடி படகுகளுக்கு வரிவிலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்குதல், பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மீனவ மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திட அரசு செயல்படுத்தி வருகிறது.

**கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்களை திறந்து வைத்தல்!**

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வடக்கு பகுதியில் 30 கோடி ரூபாய் செலவில் தூண்டில் வளைவுடன் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளம் மற்றும் தங்கச்சிமடம் கிராமத்தில் 8 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மீன் இறங்குதளம், கன்னியாகுமரி மாவட்டம், கீழமணக்குடி கிராமத்தில் 29 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மீன் இறங்குதளம், செங்கல்பட்டு மாவட்டம், பழைய நடுக்குப்பம் மற்றும் புதுநடுக்குப்பம் ஆகிய கிராமங்களில் தலா 11 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மீன் இறங்குதளங்கள் மற்றும் கோவளம் கிழக்கு கிராமத்தில் 3 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளம்;

கடலூர் மாவட்டம், தாழங்குடா கிராமத்தில் 13 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மீன் இறங்குதளம், தூத்துக்குடி மாவட்டம், கீழவைப்பார் கிராமத்தில் 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளம், மயிலாடுதுறை மாவட்டம், சின்னமேடு கிராமத்தில் 9 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் தூண்டில் வளைவுடன் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளம் மற்றும் வானகிரி கிராமத்தில் 8 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மீன் இறங்குதளம், என மொத்தம் 134 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 6 புதிய மீன் இறங்குதளங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட 4 மீன் இறங்குதளங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களை திறந்து வைத்தல்!**

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் தூத்துக்குடி, மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், மாணவர்களுக்கான 29 தங்கும் அறைகள், பொழுதுபோக்கு அறை, ஓய்வறை, உடற்பயிற்சி கூடம், வாசகர் அறை, விடுதி பாதுகாவலர் அறை உள்ளிட்ட வசதிகளுடன், தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 7 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடம்;

நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு, டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், கல்லூரி முதல்வர் அலுவலக அறை, ஆய்வகம், ஆசிரியர் கலந்துரையாடல் அறை, வாசகர் அறை உள்ளிட்ட வசதிகளுடன் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கல்லூரியின் இரண்டாம் தளத்தில் கட்டப்பட்டுள்ள நிருவாகம் மற்றும் கல்வித் தொகுதியின் கூடுதல் கட்டடம்;

என மொத்தம் 11 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் டாக்டர் கே.சு. பழனிசாமி, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் முனைவர் என். பெலிக்ஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என். ஸ்ரீதர், நாகர்கோயில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இராமநாதபுரத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரசின் திட்டங்களும், செயல்பாடுகளும்

# பொதுமக்களை உடனுக்குடன் சென்றடைய வேண்டும்!

## செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பணி ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வலியுறுத்தல்!



சென்னை கலைவாணர் அரங்கத்தில், நேற்று முன்தினம் (03.01.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் ஆறு மண்டலங்களின் இணை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடனான பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், மற்றும் செய்தித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, ஜன.5 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (3.1.2024) சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்பான அறிவிப்புகளில் நிலுவையில் உள்ள அறிவிப்புகள், தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் நிலுவையில் உள்ள அறிவிப்புகள், தமிழரசு மாத இதழ் சந்தா அதிகரித்தல் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் கள விளம்பரம் தொடர்பான தர மதிப்பீடு ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையுரை ஆற்றியபோது கூறியதாவது:

“முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று, இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக நம்முடைய துறையில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கின்றோம். அதுபோல தமிழரசு மூலம் பல்வேறு மலர்களை வெளியிட்டிருகின்றோம். இவ்வளவு மகத்தான பணியை நாம் செய்திருக்கின்றோம் என்றால், நீங்கள் அனைவரும் இதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கி இருக்கின்றீர்கள். செய்தி மக்கள் தொடர்புத் துறை அரசினுடைய ஒவ்வொரு செயல்பாட்டையும் மக்களிடம் எடுத்துச் செல்கின்ற மகத்தான பணியைச் செய்கின்ற துறை. சுதந்திரப் போராட்டத் தியாகிகள், தமிழ் மொழிக்காவலர்கள், இந்த நாட்டுக்காக. மக்களுக்காக உழைத்த தலைவர்களுக்கு ஏற்கனவே வைக்கப்பட்டுள்ள சிலைகள் மற்றும் அரங்கங்களை நாம் பராமரித்து வருகின்றோம். மேலும் முதலமைச்சர் அவர்களால் புதிதாக அறிவிக்கப்பட்ட சிலைகளையும் அரங்கங்களையும் உருவாக்கி வருகிறோம்.

அரசினால் அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களை உதாரணமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மக்களுடன் முதல்வர் திட்டம் முதலியவைகளில் மக்கள் பயன்பெறத் தேவையான தகுதிகள் குறித்து பதாகைகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மூலம் மக்களுக்கு விளக்கமாகத் தெரிவித்து பயன்பெறச் செய்ய வேண்டும்.

மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து தமிழரசு மாத இதழ் ஆயுள் சந்தாவை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அரசுபொறுப்பேற்ற போது தமிழரசு மாத இதழ் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 32,000ஆக இருந்தது. தற்போது 1,18,000ஆக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டிற்கான இலக்கு 1,50,000 ஆக நிர்ணயிக்கப்பட்டு அதனடிப்படையில், மாவட்டங்களுக்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை அமைச்சர் பெருமக்கள், மக்கள் பிரதிநிதிகள், ஒப்பந்தாரர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோரை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அணுகி ஒவ்வொருவரும் தங்கள் மாவட்டத்திற்கான இலக்கை எட்ட வேண்டும்.

குடியரசு தினம் வரவிருப்பதால், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தங்கள் மாவட்டங்களிலுள்ள சிலைகள், அரங்கங்கள், நினைவகங்கள், ஆகியவற்றை தூய்மை செய்து சிலைகளுக்கு மாலை அணிவித்து, வண்ண விளக்குகளால் அலங்கரிக்க வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிலைகள் குறித்த விவரங்களை துலங்கல் குறியீட்டு (QR Code) மூலம் மக்கள் அறியும் விதமாக, சோதனை அடிப்படையில் சென்னையில் உள்ள திருவள்ளுவர் சிலை குறித்த துலங்கல் குறியீடு உருவாக்கப்பட்டு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, தற்போது இணையதளத்தில் ஏற்றப்பட்டு பொதுமக்கள் துலங்கல் குறியீட்டை (QR Code) பயன்படுத்தி வருகின்றனர்.

இதனைப் பொதுமக்கள் மிக வும் பாராட்டுகின்றனர். இந்த மாத இறுதிக்குள் அனைத்துச் சிலைகளின் விவரங்கள் குறித்து துலங்கள் குறியீடு உருவாக்கும் பணியை முடிக்க வேண்டும்.

அரசின் செய்திகள் மற்றும் திட்டங்கள் குறித்த விவரங்கள் உடனுக்குடன் பொதுமக்களைச் சென்றடையும் வகையில் பொது மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் முதற்கட்டமாக முக்கிய 10 பேருந்து நிலையங்களில் மின் சுவர்கள் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, காஞ்சிபுரம், கடலூர், மதுரை ஆகிய பேருந்து நிலையங்களில் மின்சுவர்கள் அமைக்கப்பட்டு, துவக்கி வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கும்பகோணம், திருச்சி, தாம்பரம், திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், திண்டுக்கல் ஆகிய பேருந்து நிலையங்களில் மின்சுவர் அமைக்கும் பணிகளை விரைந்து முடித்து மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வரும் 6ஆம் தேதி திரைத்துறையினரால் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நடத்தப்பட உள்ளது. அதற்கு வேண்டிய உதவிகளை நம் துறை செய்ய வேண்டும்.

சங்கமம் நிகழ்ச்சி சென்னை மட்டுமல்லாமல், காஞ்சிபுரம், சேலம், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களிலும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சி நன்றாக நடைபெற நம் துறை அலுவலர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் தற்போது மக்கள் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டு வரும் அரங்கங்களில் தரைத்தளத்தை உயரமாகவும், தரமாகவும், விரைவாகவும் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசின் மீதான உண்மைக்கு மாறான செய்திகள் வரும்பொழுது அதற்கு மறுப்பு தெரிவித்து உண்மையான செய்தியினை நாளிதழ்கள், சமூக ஊடகங்கள் வாயிலாக மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

அரசின் திட்டங்களை மக்கள் அறியும் வண்ணம், மாவட்ட ஆட்சியர் மூலம் செய்தியாளர்களுடன் பயணம் மேற்கொண்டு அத்திட்டம் குறித்து செய்தியாளர்களிடம் விவரித்து பத்திரிகைகளில் செய்திகள் வெளிவரச் செய்து, அத்திட்டங்கள் பற்றி, மக்கள் அறிந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும்.

முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் நோக்கத்தையும், நடைபெறும் முகாம்கள், அம்முகாம்களில் பொதுமக்களின் குறைகள் எவ்வாறு தீர்வு காணப்படுகிறது என்பதையும் பொதுமக்களிடம் கொண்டு சேர்த்துப் பயன்பெறச் செய்ய வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அரங்கங்கள், நினைவகங்கள் ஆகியவை குறித்த பெயர்ப் பலகைகளை சாலைகளில் அவற்றின் அருகிலேயே வைக்காமல், பயணம் செய்வோர் கவனிக்கும் வகையில் சாலையில் சிறிது தூரத்திற்கு முன்பாகவே பெரிய அளவில் வைக்க வேண்டும். அத்துடன் அவை அமைந்துள்ள சாலையின் இருபுறங்களிலும் இரவு நேரத்திலும் தெரியும் வண்ணம் அவற்றின் புகைப்படங்கள் தெளிவாகத் தெரியும் வகையில் பெயர்ப் பலகைகளை அமைக்க வேண்டும். அப்பொழுதுதான் வழியில் செல்பவர்கள் நினைவகங்கள் இருக்கும் இடத்தைக் கடந்து செல்வதற்கு முன்னதாகவே அறிந்து அவற்றைப் பார்க்க விரும்புவார்கள்.

மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், மாவட்டங்களில் ஏதாவது பிரச்சினை எழும்போது, அதை மாவட்ட ஆட்சித்தலைவரிடம் எடுத்துச் சென்று, பிரச்சினைக்குச் சுமூகத் தீர்வு காண வேண்டும். செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலுவலர்கள் அரசுக்கும்மக்களுக்கும் பாலமாகச் செயல்பட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கூறினார்.

முன்னதாக, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், முன்னிலையுரையாற்றினார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் வரவேற்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் இயக்குநர் (செய்தி), ச.செல்வராஜ், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், மாநகராட்சி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், பொதுப்பணித்துறை மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் 100 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவானது 04.01.2024 அன்று வெள்ளிச்சந்தை ஊராட்சி அலுவலகம் அருகில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் சி.என்.செல்வன் தலைமையில் நடைபெற்றது. கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

### ஆவடியில் மக்களுடன் முதல்வர் திட்டம்

திருவள்ளூர், ஜன.5–

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதியில், மக்களின் கோரிக்கைகளை விரைவாக நிறைவேற்றும் வகையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் ஆவடி மாநகராட்சி, மிட்டின மல்லி, சமுதாய கூடத்தில், வார்டு எண் 1, 2, 3, 4–ல் உள்ள பொது மக்கள் பயன்பெறும் வகையில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ முகாமை துவக்கி வைத்து பொது மக்களின் கோரிக்கை மனுக்கள் பெற்று விரைவில் நட வடிக்கை எடுக்க அதிகாரியிடம் கூறினார்.

இதில் மாநகர மேயர் ஜி.உதயகுமார், மாநகர ஆணையர் ஷேக் அப்துல் ரஹ்மான், மாநகர பொறுப்பாளர் சண்.பிரகாஷ், மண்டல தலைவர்கள் அமுதா பேபிசேகர், ஜோதிலட்சுமி நாராயண பிரசாத், பகுதி செயலாளர்கள் பொன்விஜயன், மாநகராட்சி பணிகுழு தலைவர் எஸ்.எம்.ஆசிம்ராஜா, மாமன்ற உறுப்பினர்கள் கோவிந்தராஜ், ஆறுமுகம்வட்ட செயலாளர்கள் கே.பார்த்தசாரதி,ஏ.ஐசய்யா, டி.இளங்கோவன், வெ.முனியசாமி மற்றும் மாநகராட்சி, மின்வாரியம், வருவாய்துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் உள்ளனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றியம் மேற்கு தொடர்ச்சி மலை கிராமமான பன்றிமலை ஊராட்சியில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்ற ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ. பெரியசாமி, உடனடியாக அவர்களுக்கு தீர்வு வழங்கினார். அருகில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மொ.ந.பூங்கொடி, திண்டுக்கல் எம்.பி.ப.வேலுச்சாமி, திட்ட இயக்குநர் பெ.திலகவதி, ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### ரெட்டியார்சத்திரம் - மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில்

# ரூ.50 லட்சத்தில் நவீன திருமண மண்டபம்!

## பன்றிமலையில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி அறிவிப்பு!

திண்டுக்கல் ஜன, 5-

மலை கிராமங்களில் வசிக்கும் மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.50 லட்சம் மதிப்பில் நவீன திருமண மண்டபம் கட்டுவதற்கான தொடக்க விழா விரைவில் நடைபெறும் என பன்றிமலையில் நடைபெற்ற விழாவில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ரெட்டியார் சத்திரம் தெற்கு ஒன்றியம் மேற்கு தொடர்ச்சி மலை கிராமமான பன்றிமலை ஊராட்சியில் மலையாண்டி கிராமத்தில் ரூ.11 லட்சம் மதிப்பில் சமுதாய கிணறுக்கான தொடக்க விழாவில் கலந்து கொண்ட பின்பு பன்றிமலை விழா அரங்கத்தில் பொதுமக்களிடம் இருந்து குறைகளை கேட்டறிந்து மனுக்களை பெறும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் மொ.ந.பூங்கொடி தலைமை தாங்கினார். திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, திட்ட இயக்குநர் பெ.திலகவதி, ரெட்டியார்சத்திர ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவ குருசாமி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, கூட்டுறவு சங்க இணை பதிவாளர் கோ. காந்தி நாதன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொது செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு வழங்கினார். அப்போது பன்றிமலை ஊராட்சி மன்ற திமுக தலைவர் தேவி ராகவன், ஒன்றியக்குழு உறுப்பினர் தமிழ்ச்செல்வி முத்துப்பாண்டி ஆகியோர் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரிய சாமியிடம் தங்கள் ஊராட்சிக்கு (பன்றிமலை) மலைகிராமத்தை சேர்ந்த மலை வாழ் மக்கள், பழங்குடியினர் பயன்பெறும் வகையில் சமுதாயக்கூடம் (திருமண மண்டபம்) அமைத்துக்கொடுக்க வேண்டும் என கோரிக்கை மனு கொடுத்தனர். மனு கொடுத்த ஒரு நிமிடத்திலேயே ரூ.50 லட்சம் மதிப்பில் திருமண மண்டபம் கட்டுவதற்கான உத்தரவை ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் வழங்கியவுடன் பொதுமக்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

பின்னர் மலைமக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கேட்போருக்கு வரம் கொடுக்கும் சாமியாக நமது திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உள்ளார். அவர்கள் ஆட்சியில் பொது மக்கள் கேட்பது மட்டுமின்றி கேட்காத நலத்திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகிறது என பெருமிதத்தோடு கூறினார்.

பன்றிமலை ஊராட்சியில், 2021-2022 முதல் 2023-2024ஆம் ஆண்டு வரை பல்வேறு திட்டங்களின் கீழ், ரூ.2.16 கோடி மதிப்பீட்டில் 12 பணிகள் எடுக்கப்பட்டதில், ரூ.1.93 கோடி மதிப்பீட்டிலான 8 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 4 பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல் ஆடலூர் ஊராட்சியில், 2021-2022 முதல் 2023-2024ஆம் ஆண்டு வரை பல்வேறு திட்டங்களின் கீழ், ரூ.2.15 கோடி மதிப்பீட்டில் 19 பணிகள் எடுக்கப்பட்டதில், ரூ.1.85 கோடி மதிப்பீட்டில் 6 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 13 பணிகள் நடைபெற்று வருகின்றன என்றதோடு இன்று என்னிடம் கோரிக்கை மனு கொடுத்த பொதுமக்களின் கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்படும் என உறுதியளித்தார்.

அப்போது பள்ளி மாணவன் ஒருவன் அமைச்சரிடம் வந்து தங்கள் பள்ளியின் மேற்கூரை மழை பெய்தால் ஒழுகுவதாகவும், கூடுதலாக கழிப்பறை வசதி வேண்டுமென கோரிக்கை விடுத்தார். மாணவரின் கோரிக்கையை ஏற்று உடனடியாக அவற்றை நிறைவேற்ற அதிகாரிகளுக்கும், ஊராட்சி மன்ற தலைவருக்கும் உத்தரவிட்டார்.

மலை கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் செல்போன் டவர் அமைக்க கோரிக்கை விடுத்துள்ளனர். ஏற்கனவே திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி அவர்களின் முயற்சியால் திண்டுக்கல் மாவட்டத்தில் 60 இடங்களில் செல்போன் டவர் (பி.எஸ்.என்.எல். டவர்) அமைக்க திட்டமிட்டு தற்போது 17 செல்போன் டவருக்கான பணிகள் முடிக்கப்பட்டன. விரைவில் ஆடலூர், பன்றிமலை ஊராட்சி பகுதியில் 4 முதல் 5 இடங்களில் செல்போன் டவர் அமைத்துக்கொடுக்கப்படும் என்றதோடு தமிழக முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் மூலம் மலைகிராமத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கு மலைவாழ் மக்கள், மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிக்கு உயர்தரமான தார் சாலை அமைத்துக் கொடுக்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வழங்கல் அலுவலர் சிவக்குமார், திண்டுக்கல் மேற்கு வட்ட சமூக பாதுகாப்பு தாசில்தார் மீனாதேவி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கிருஷ்ணன், மலரவன், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, ஒன்றிய துணை பெருந்தலைவர் ராஜேஸ்வரி தமிழ்ச்செல்வன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சுதா செல்வி ஆரோக்கிய மேரி பன்றிமலை ஊராட்சி மன்ற தலைவர் தேவிராகவன், துணைத் தலைவர் கோபி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைபட்டி வாஞ்சிநாதன்,

ஒன்றிய பொறியாளர்கள் மகேந்திரன், ராஜேஷ் கண்ணன், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் தமிழ்ச்செல்வி முத்துப்பாண்டி, நாகலெட்சுமி ரமேஷ், கோனூர் திருப்பதி, சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக தாசில்தார் நவநீத கிருஷ்ணன், அலுவலர் வடிவேல்முருகன், ரெட்டியார்சத்திரம் கூட்டுறவு வங்கி செயலாளர் சக்கரவர்த்தி மணிமாறன், கன்னிவாடி பேரூராட்சி மன்ற தலைவர் தனலெட்சுமி சண்முகம், கன்னிவாடி பேரூர் கழக செயலாளர் இளங்கோவன், ஊராட்சிமன்ற உறுப்பினர்கள் ஜெயராணி, முருகஜோதி, லலிதா, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் முத்துகிருஷ்ணன், புதுக்கோட்டை ரமேஷ், உட்பட ஒன்றிய கழக தி.மு.க. நிர்வாகிகள் கிளை கழக நிர்வாகிகள், இளைஞரணியினர், மகளிரணியினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி. சிட்டிபாபு

**சனவரி 5 (1977)**



தியாக மறவன் – கொள்கைக் குன்று – அண்ணா பெரும்படையின் அருந்தொண்டன் – தலைவர் கலைஞர் உடன் நின்று கழகப் பணியாற்றிய தோழன்.

சென்னை மாநகராட்சியின் மேயர், இருமுறை மக்களவை உறுப்பினர், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், ‘கழகக்குரல்’ ஆசிரியர் உள்ளிட்ட பொறுப்புகளையேற்று சிறப்பாகப் பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் அன்புக்குப் பாத்திரமானவராகத் திகழ்ந்தார்.

நெருக்கடிநிலை காலத்தில் ஓராண்டு மிசா கைதியாக இருந்தபோது சிறைக் காவலர்கள் தாக்கியதில் படுகாயமுற்று மரணமடைந்தார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.1.2024) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு சந்தித்து, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 கோடியே 6 இலட்சத்து 27 ஆயிரத்து 472 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, புதிய திருப்பூர் பகுதி வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் / கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் சந்திரகாந்த் காம்ளே, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர்/ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் ச. விஜயகுமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், நிர்வாக இயக்குநர் ஹனிஷ் சப்ரா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வி. தட்சிணாமூர்த்தி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் மரு. டி.ஜி. வினய், பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ். சிவராசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் செயலாளர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று(4.1.2024) காவல்துறை சார்பில் 18 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 62 காவலர் குடியிருப்புகள், 2 காவல் நிலையங்கள், திருநெல்வேலி மாநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படைகளுக்கு 2 ஒருங்கிணைந்த நிர்வாகக் கட்டடங்கள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மை செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முனைவர் அ.கா. விசுவநாதன், ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.1.2024) தலைமைச் செயலகத்தில், கடலோரக் காவல் படை கிழக்கு மண்டல தளபதி தலைமை ஆய்வாளர் டோனி மைக்கேல் அவர்கள் சந்தித்துப் பேசினார். உடன் முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் – நா. முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் க. நந்தகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2024) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் – தாம்பரம் சானடோரியம், ஹோம் சாலையில் 18 கோடி ரூபாய் செலவில் 461 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பணிபுரியும் மகளிர் விடுதிக் கட்டடத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே. அமுதவல்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.




கலைஞர் 100
1924 - 2023



நகராட்சி நிருவாகம் மற்றும்
குடிநீர் வழங்கல் துறை

ரூ. 1933.7 கோடி மதிப்பிலான
206 திட்டப் பணிகளின் தொடக்க விழா மற்றும்
புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா

காணொலிக் காட்சி மூலம் தொடங்கிவைத்து,
121 நபர்களுக்குக் கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளை வழங்குபவர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்

முன்னிலை :
மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்
திரு. கே.என். நேரு அவர்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் நகராட்சி நிருவாக இயக்குநரகம் சார்பில்



- புதிய பூங்காக்கள்
- புதிய விளையாட்டு மைதானங்கள்
- புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள்
- புதிய வணிக வளாகங்கள்
- புதிய பேருந்து நிலையங்கள்
- புதிய சந்தைகள்
- புதிய சிறப்பு தங்குமிடங்கள்
- புதிய வகுப்பறைகள்
- புதிய சமுதாய நலக்கூடங்கள்
- புதிய பன்னடுக்கு வாகன நிறுத்துமிடங்கள்
- புதிய மீன் சந்தைகள்
- புதிய மண்டல அலுவலகக் கட்டடங்கள்
- பேருந்து நிலைய மேம்பாடு
- கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்
- அறிவுசார் மையங்கள்
- குளங்கள் புனரமைப்புப் பணிகள்
- நுண்ணுயிர் மையங்கள்
- நீர்நிலை மேம்பாடுகள்
- வாரச்சந்தை மேம்பாட்டுப் பணிகள்
- விரிவான பாதாள சாக்கடைத் திட்டங்கள்



உள்ளிட்ட திட்டப் பணிகளின் தொடக்க விழா மற்றும் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா

நாள் : 05.01.2024 வெள்ளிக்கிழமை நேரம் : காலை 10.30 மணி
இடம் : தலைமைச் செயலகம், சென்னை.

முனைவர் தா. கார்த்திகேயன் இ.ஆ.ப.
அரசு முதன்மைச் செயலாளர்
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

செ.ம.தொ.இ / 6 / வரைகலை / 2024



கலைஞர் 100 1924-2023

நாள் : 05.01.2024 வெள்ளிக்கிழமை



ரூ. 30.60 கோடி மதிப்பில் திருப்பூர் மாநகராட்சி புதிய பேருந்து நிலையம் விரிவாக்கப்பணி




ரூ. 2.61 கோடி மதிப்பில் திருப்பூர் மாநகராட்சி நஞ்சப்பா ஆண்கள் மேல்நிலை பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மைய கட்டிடம்



ரூ. 2.5 கோடி மதிப்பில் திருப்பூர் மாநகராட்சி 4வது மண்டல அலுவலக கட்டிடம்




ரூ. 2.25 கோடி மதிப்பில் திருப்பூர் மாநகராட்சி பகுதியில் 9 இடங்களில் நகர்ப்புற நலவாழ்வு மைய கட்டிடம்




ரூ. 4.06 கோடி மதிப்பில் திருப்பூர் மாநகராட்சி அறிவியல் பூங்கா



**திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் ரூ. 41.77 கோடி மதிப்பிலான திட்டப்பணிகளை காணொளி காட்சி வாயிலாக பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கும்**

கழக தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு

# முதலமைச்சர்

அவர்களுக்கு

## நன்றி! நன்றி!! நன்றி!!!

மாண்புமிகு. **கே.என்.நேரு**
நகர்ப்புற வளர்ச்சிதுறை அமைச்சர்
கழக முதன்மை செயலாளர்

மாண்புமிகு. **மு.பெ.சாமிநாதன்**
தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

மாண்புமிகு. **என்.கயல்விழிசெல்வராஜ்**
ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
கழக மகளிர் அணி துணைச்செயலாளர்

உயர்திரு. **க.செல்வராஜ்**
திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர்
திருப்பூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர்

திரு. **இல.பத்மநாபன்**
மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர்
திருப்பூர் தெற்கு மாவட்ட கழக செயலாளர்

திரு. **டி.கே.டி.மு.நாகராசன்**
திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர்
தொ.மு.ச. மாநில துணைச் செயலாளர்

திரு. **சி.கோவிந்தசாமி**
மாநகராட்சி 3ம் மண்டலத் தலைவர்
தொ.மு.ச. மாநில துணைத் தலைவர்

திருமதி. **வெ.உமா மகேஸ்வரி**
மாநகராட்சி 1ம் மண்டலத் தலைவர்

திரு. **ஆர்.கோவிந்தராஜ்**
மாநகராட்சி 2ம் மண்டலத் தலைவர்

பகுதி கழக செயலாளர்கள்

மேங்கோ **அ.பழனிசாமி** நல்லூர்
**கொ.இராமதாஸ்** வேலம்பாளையம்
**அ.நாகராஜன்** அண்ணாநகர்
**வெ.ஜோதி** பாண்டியன்நகர்
போலார் **இரா.சம்பத்குமார்** கொங்குநகர்
**மு.க.உசேன்** வாவிபாளையம்
மியாமி **ஆ.அய்யப்பன்** கருவம்பாளையம்
வைஸ் **பி.முருகசாமி** ஆண்டிபாளையம்
**எஸ்.எம்.குமார்** முத்தணம்பாளையம்
**அ.கோவிந்தராஜ்** வீரபாண்டி

**துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள்**

**ந.தினேஷ்குமார்** MIB மேயர் – திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (4.1.2024) முகாம் அலுவலகத்தில், சென்னை, கிண்டி மெட்ராஸ் ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் நாளை (6.1.2024) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி தமிழ்த்திரைப்படத்தயாரிப்பாளர்கள்சங்கம்நடத்தும் "கலைஞர்100" திரைத்துறையின்மாபெரும்கலைவிழாவிற்கான அழைப்பிதழை தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் முரளி ராமசாமி வழங்கினார். உடன் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் துணைத் தலைவர் பூச்சி எஸ். முருகன், FEFSI தலைவர் ஆர்.கே. செல்வமணி, தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்தின் செயலாளர்கள் ஆர். ராதாகிருஷ்ணன், கதிரேசன், திரைப்பட இயக்குநர் லிங்குசாமி ஆகியோர் உள்ளனர்.

ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டத்தின்கீழ்

# 10 குடும்பங்களுக்கு ரூ.2.50 லட்சத்தில் தள்ளு வண்டிகள்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்!

சென்னை, ஜன. 5 -

குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (4.1.2024) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை அலுவலகத்தில் வாரிய திட்டப் பகுதிகளில் வசித்து வரும் குடியிருப்பு தாரர்களுக்கு ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச் சூழல் சீரமைப்பு திட்டத்தின் கீழ் தலா ரூ.25,000 வீதம்10 குடும்பங்களுக்கு ரூ.2,50,000 மதிப்பீட்டில் தள்ளுவண்டிகளை வழங்கினார்.

குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் பேசுகையில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், நீர்வளத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி , சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை ஆகியவற்றுடன் இணைந்து ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டம் 2017 ஆம் முதல் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. இத்திட்டத்தின் கீழ்வாரிய திட்டப் பகுதிகளான பெரும்பாக்கம், நாவலூர், கூடப்பாக்கம், அகில இந்தியவானொலி திட்டப்பகுதி, கேசவபிள்ளைபூங்கா, அத்திப்பட்டு ஆகிய திட்டப் பகுதிகளில் இதுவரை 13,382 குடும்பங்களுக்கு மறுகுடியமர்வு செய்யப் பட்டுள்ளன.

மேலும் இத்திட்டப் பகுதியில் வசிக்கும் குடியிருப்பு தாரர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சிறுதொழில் உதவி திட்டத்தின் கீழ் சுய தொழில் செய்யும் குடும்பங்களுக்கு தள்ளு வண்டிகள், மூன்று சக்கர வண்டிகள், நகல் எடுக்கும் கருவிகள், மாவு அரைக்கும் இயந்திரங்கள், சிற்றுண்டி கடைகள் நடத்துவதற்கான பாத்திரங்கள், தையல் இயந்திரங்கள் , மின் இணைப்பு தையல் இயந்திரங்கள் போன்ற இதர உபகரணங்கள் இதுவரை 1550 குடும்பங் களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

தற்போது மேலும் தலா ரூ.25,000 வீதம் 10 குடும்பங்களுக்கு ரூ.2,50,000 மதிப்பீட்டில் இன்று தள்ளு வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர் இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன் வாரிய செயலாளர் திருமதி.துர்காமூர்த்தி, வாரிய தலைமை பொறியாளர் வே.சண்முகசுந்தரம், தலைமை சமுதாய வளர்ச்சி அலுவலர் ஜே.நிர்மல்ராஜ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கில் திருச்சி சிவா எம்.பி. பங்கேற்பு!

# கழக அயலக அணி மாவட்ட - பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## ஆர்.எஸ்.பாரதி தலைமை! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

சென்னை, ஜன. 5 -

கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

நமது நெஞ்சம் நிறைந்த கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர் அவர்களின் வழி காட்டுதலின்படி கழக அயலக அணி சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் ஜனவரி 10 மாலை 3 மணி அளவில் ராயப் பேட்டை ஒய்.எம்.சி.ஏ சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா "சமூக நீதிப் போரில் திராவிட இயக்கம்" எனும் தலைப்பில் உரையாற்றுகிறார்.

கழக அயலக அணி மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஜனவரி 10 புதன் கிழமை அன்று மாலை 5 மணி அளவில் ராயப் பேட்டை ஒய் எம் சி ஏ சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்.

இந்நிகழ்வுகளுக்கு கழக அயலக அணி தலைவர் டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி., இணைச் செயலாளர்கள் டாக்டர் செந்தில்குமார் எம்.பி., வழக்கறிஞர். மனு சண்முகசுந்தரம், வழக்கறிஞர் புகழ்காந்தி, துணைச் செயலாளர்கள் சேலம் திருமதி. எஸ்.உமாராணி எம்.சி., விஜயன்.ராமகிருஷ்ணன் எம்.சி., வழக்கறிஞர் கன்னிகை ஜி.ஸ்டாலின், வழக்கறிஞர் பரிதிஇளம்சுருதி எம்.சி., முத்துவேல்.ராமசாமி, சேகர்.ஜே.மனோகர், குமரி.எ.பாபு வின்பிரெட் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எனவே இரண்டு நிகழ்வுகளிலும் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்டத்தலைவர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் - தூத்துக்குடியில்

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 1000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்கள்!

## மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் ஏற்பாட்டில்!

சென்னை, ஜன. 5 -

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழக அரசு சார்பாகவும் கழகம் சார்பாகவும் முழு வீச்சில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் ஏற்பாட்டில் தூத்துக்குடி மேலூர் அருகே உள்ள முத்தம்மாள் காலனி பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 1000 குடும்பங்களுக்கு 5 கிலோ அரிசி, பிரட், பெட்ஷீட், உடுத்த உடைகள் ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வி. ரங்கசாமி (AE) மாசு கட்டுப்பாடு வாரியம் தூத்துக்குடி ஹேமந்த், திருவொற்றியூர் மேற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஸ்ரீசரவணன், ரெட்ஹில்ஸ் மணிகண்டன், சிவ சூரியன், பிரகாஷ், ஐயப்பா, ரூபேஷ், விக்கி, சரத், ஐசக், மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு வழங்கினர்.



குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (4.1.2024) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை அலுவலகத்தில் வாரிய திட்டப்பகுதிகளில் வசித்து வரும் குடியிருப்புதாரர்களுக்கு ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டத்தின் கீழ் தலா ரூ. 25,000 வீதம் 10 குடும்பங்களுக்கு ரூ . 2,50,000 மதிப்பீட்டில் தள்ளு வண்டிகளை வழங்கினார். உடன் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன், வாரிய செயலாளர் திருமதி.துர்காமூர்த்தி, வாரிய தலைமை பொறியாளர் வே.சண்முகசுந்தரம் உட்பட பலர் உள்ளனர்.



உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், அத்திக்கோம்பை ஊராட்சி, குமாரசாமிகவுண்டன்புதூரில் புதிய நியாயவிலைக்கடை கட்டடத்தை நேற்று (04.01.2024) திறந்து வைத்து, பொதுமக்களுக்கு குடிமைப்பொருட்கள் வழங்கினார். அருகில் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி மு.அய்யம்மாள், ஊராட்சி ஒன்றியக் குழு துணைத் தலைவர் திருமதி காயத்ரிதேவி தர்மராஜ் உட்பட பலர் உள்ளனர்.

தாம்பரம் சானடோரியத்தில் ரூ.18 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள

# புதிய பணிபுரியும் மகளிர் விடுதிக் கட்டடம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜன. 5-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2024) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சானடோரியம், ஹோம் சாலையில் 18 கோடி ரூபாய் செலவில் 461 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பணிபுரியும் மகளிர் விடுதிக் கட்டடத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

பணிபுரியும் இடங்களில் பெண்களின் பங்களிப்பில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. தமிழ்நாட்டில் பெரும்பான்மையான பெண்கள் கிராமங்கள், சிறு நகரங்களிலிருந்து பெருநகரங்களுக்கு பணிநிமித்தம் இடம்பெயர்ந்து வருகின்றனர். அவ்வாறு பணி நிமித்தமாக பெண்கள் தங்களது வீட்டை விட்டு வெளியில் தங்க வேண்டிய சூழ்நிலை யில், அவர்களுக்கு குறைந்த வாடகையில், பணிபுரியும் இடத்திற்கு அருகில் தரமான மற்றும் பாதுகாப்பான தங்கும் விடுதிகள் அவசியத் தேவையாக உள்ளது. பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகளின் தேவைகளை உணர்ந்த தமிழ்நாடு அரசு, பொருளாதார ரீதியாக நலிவுற்ற மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர்களுக்கான பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகளை தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் அமைத்து வருகிறது.

பணிபுரியும் மகளிருக்கான புதிய விடுதிகளை உருவாக்கிட "தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம்" தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டு, புதிய விடுதிகளை கட்டுதல், பழைய விடுதிகளை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

பணிபுரியும் மகளிர் விடுதிகளின் தேவை தற்போது அதிகரித்து வருவதைத் கருத்தில் கொண்டு, செங்கல்பட்டு மாவட்டம் - கூடுவாஞ்சேரி, திருச்சி ராப்பள்ளி ஆகிய இடங்களில் 226 மகளிர் தங்கும் வகையில் கட்டப்பட்டுள்ள 2 புதிய பணிபுரியும் மகளிருக்கான விடுதிக் கட்டடங்கள், சென்னை - அடையாறு, விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், வேலூர், திருநெல்வேலி மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் 458 மகளிர் தங்கும் வகையில் புதுப்பிக்கப்பட்ட

7 பணிபுரியும் மகளிருக்கான விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.07.2023 அன்று திறந்து வைக்கப்பட்டு, செயல்பட்டு கொண்டிருக்கிறது.

அதன் தொடர்ச்சியாக, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் தாம்பரம் சானடோரியம் பகுதியில், நான்கு தளங்களில் 18 கோடி ரூபாய் செலவில் 461 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பணிபுரியும் மகளிர் விடுதிக் கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே.அமுதவல்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தாம்பரம் சானடோரியத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, இ. கருணாநிதி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர. ராகுல்நாத், தாம்பரம் மாநகராட்சி ஆணையர் திருமதி. அழகுமீனா உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய அமைச்சர் ஆதாரமற்ற குற்றச்சாட்டு!

# அனைத்துப் பணிகளும் முடிந்த பின்னரே கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் திறப்பு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு விளக்கம்!

சென்னை, ஜன. 5-

அனைத்து பணிகளும் முடிவடைந்த பின்னரே கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் திறக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார். ஒன்றிய இணையமைச்சர் முருகன் ஆதாரமற்ற பொய் குற்றச்சாட்டுக்களை தெரிவித்து வருவதற்கும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் கிளாம்பாக்கத்தில் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை கடந்த சனிக்கிழமை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தில் இருந்து தென்மாவட்டங்களுக்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் பேருந்து முனையத்தின் செயல்பாடுகளை அறநிலையத்துறை அமைச்சரும், சென்னை பெருநகர வளர்ச்சி குழும தலைவருமான சேகர்பாபு ஆய்வு மேற்கொண்டார்.

பேருந்து நிலையத்தில் மேற்கொள்ள உள்ள பணிகள் குறித்து அதிகாரிகளிடமும், வசதிகள் குறித்து பயணிகளிடமும் அவர் கேட்டறிந்தார். தொடர்ந்து மக்கள் உதவி மையத்தில் உள்ள அதிகாரிகளிடம் பயணிகள் கேட்கும் கேள்விக்கு உரிய முறையில் பதில் அளிக்க வேண்டும் என அமைச்சர் அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது நகராட்சி நிர்வாகத்துறை செயலாளர் சமய மூர்த்தி, சென்னை பெருநகர வளர்ச்சி குழும உறுப்பினர் செயலர் அன்ஷுல் மிஸ்ரா, தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அமல்ராஜ் உள்ளிட்ட அதிகாரிகள் இருந்தனர். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சேகர்பாபு, கடந்த அ.தி.மு.க ஆட்சியில் 30 சதவீத பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டு இருந்ததாகவும், தி.மு.க ஆட்சி அமைந்த பின்னர் முறையாக திட்டமிட்டு பணிகள் முடிக்கப்பட்டு பேருந்து நிலையம் திறக்கப்பட்டுள்ளதாக சேகர்பாபு தெரிவித்தார்.




சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் முதல்வரின் விலையில்லா மிதிவண்டியினை மாணவ – மாணவிகளுக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் உட்பட அரசு அதிகாரிகள் உள்ளார்கள்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று முன்தினம் 03.01.2024 வெள்ள பாதிப்புகள் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் நாடாளுமன்ற கழகக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் மற்றும் மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட தொழில் மையம் மூலம் நீட்ஸ் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ் 32 பயனாளிகளுக்கு ரூ.2,13,591/– மதிப்பிலான மானியத்துடன் கூடிய ரூ.72,84,261/ கடன் உதவிக்கான ஆணைகளை பயனாளிகளுக்கு வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், மாவட்ட ஊராட்சி தலைவர் அ.பிரம்மசக்தி, தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் ச.தினேஷ் குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி.ஆர். ஜஸ்வர்யா, மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன் ஆகியோர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (03.01.2024) தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தலைமையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் மற்றும் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் வெள்ள பாதிப்புகள் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்க்கண்டேயன், திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி எஸ்.அமிர்தராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் அ.பிரம்மசக்தி, தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் ச.தினேஷ் குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி.ஆர்.ஜஸ்வர்யா, மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன் ஆகியோர் உள்ளனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பின்படி

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்தில் முழுவீச்சில் நிவாரணப் பணிகள்!

## ஆய்வுக் கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. தகவல்!

தூத்துக்குடி, ஜன.5–

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்டத்தில் அதிகனமழையினால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகள் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தலைமையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன், மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (03.01.2024) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தெரிவித்ததாவது:–

முதலமைச்சர் அவர்கள் அறிவித்த படி, தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதித்த பகுதிகளில் உள்ள 292017 குடும்பங்களுக்கு ரூ.6,000/ நிவாரணத்தொகை மற்றும் 5 கிலோ அரிசி பையும், 188650 குடும்பங்களுக்கு ரூ.1,000/ நிவாரணத் தொ கையும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வெள்ள பாதிப்பால் மொத்தம் 7762 வீடுகள் சேதமடைந்துள்ளது. இதில் 4412 குடிசை வீடுகள் பகுதியாகவும், 2794 குடிசை வீடுகள் முழுமையாகவும், 472 கான்கிரீட் வீடுகள் பகுதியாகவும், 84 கான்கிரீட் வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. மேற்படி வீடுகள் சேதமடைந்த வகைக்கு 3981 பயனாளிகளுக்கு ரூ.3,82,77,000 நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ள பாதிப்பால் 153132.38.5 ஹெக்டேர் வேளாண் பயிர்களும், 32592.02.5 ஹெக்டேர் தோட்டக்கலை பயிர்களும் சேதமடைந்துள்ளன. மேலும், 688.81.7 ஹெக்டேர் விவசாய நிலங்களில் வெள்ளத்தால் அடித்துவரப்பட்ட மண் படிந்துள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறு வணிகர்களுக்கு கடன் வழங்க கூட்டுறவு வங்கிகள் மூலம் மனுக்கள் பெறப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் சிறு வணிகர்கள் மற்றும் சிறு கடை உரிமையாளர்கள் மற்றும் தெருவோர வியாபாரிகளுக்கு ரூ.10,000/ வரை 4 சதவீத வட்டி, ரூ.1 இலட்சம் வரை 6 சதவீத வட்டி வீதத்தில் கடன் வழங்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் 10282 உற்பத்தி நிறுவனங்களும், 30297 சேவை நிறுவனங்களும், 2583 வியாபாரம் சார்ந்த நிறுவனங்களும் (மொத்தம் 43162) உதயம் பதிவுச் சான்றிதழ் பெற்றுள்ளன. மாவட்டத்தில் மொத்தம் உள்ள 10 வட்டங்களில், 5 வட்டங்களில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பெருமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பான்மையான உற்பத்தி சார்ந்த நிறுவனங்கள் உதயம் பதிவு மேற்கொண்டு, காப்பீடு செய்துள்ளனர்.

ஆனால் வியாபாரம் மற்றும் சேவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் வங்கிக் கடன் பெற்றிருந்தால் மட்டுமே உத்யம் பதிவு மற்றும் காப்பீடு மேற்கொள்கின்றனர்.

முதலமைச்சர் அவர்களின் நிவாரணத் தொகுப்பில் அறிவிக்கப்பட்டுள்ள சிறு வணிகர்களுக்கான ரூ.1 இலட்சம் வரையான சிறப்பு கடன் திட்டம் குறித்து வணிகர் சங்கங்களுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான ரூ.3 இலட்சம் வரையான வெள்ள நிவாரணக் கடனுதவித் திட்டம் குறித்து பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தொடர்புடைய சங்கங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வணிகர்களுக்கு கடன்!

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறு வணிகர்கள் மற்றும் சேவை நிறுவனங்களிடமிருந்து கடன் கோரி இதுவரை வரப்பட்டுள்ள விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டு மானியத்துடன் கூடிய கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும் / சிறு வணிகர்களுக்கும் சிறப்பு கடன் முகாம்கள் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 12 மனுக்கள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆழ்வார்திருநகர், திருவைகுண்டம், தூத்துக்குடி, திருச்செந்தூர், கருங்குளம், உடன்குடி, சாத்தான்குளம் ஆகிய வட்டாரங்களில் சிறப்பு வங்கியாளர்கள் கூட்டம் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு தகுதியான அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் கடன் வழங்க வங்கியாளர்களிடம் அறிவுறுத்தப்பட்டது.

30.12.2023 அன்று சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்களால் திருவைகுண்டம் வட்டாரத்தில் 15 சுய உதவிக் குழுக்களுக்கு 1.03 கோடி கடன் வழங்கப்பட்டது. மேலும் வட்டார மேலாண்மை இயக்க பணியாளர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் தகுதியான அனைத்து குழுக்களையும் கண்டறிந்து தர மதிப்பீடு செய்ய திட்டமிடப்பட்டு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே தரமதிப்பீடு செய்து வங்கியில் நிலுவையில் உள்ள குழுக்களுக்கு உடனடியாக கடன் விடுவிக்க வட்டார அளவிலான வங்கியாளர்களிடம் அறிவுறுத்தப்பட்டது.

### மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு கடன்!

மாவட்ட அளவில் வங்கியாளர்கள் கூட்டத்தில் பெருமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வட்டாரங்களில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் வங்கிகளில் பெற்ற கடன்களுக்கு தவணைக் காலத்தை நீட்டிப்பு செய்திட சிறப்பு வங்கியாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. சேதமடைந்த மீன்பிடி படகுகளுக்கு நிவாரணம் ரூ.15 கோடி வழங்கப்படும். நாட்டுப் படகு மீனவர்களின் உதவியுடன் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழை வெள்ளத்தில் சிக்கியிருந்த சுமார் 2000 பொதுமக்கள் மீட்கப்பட்டனர்.

மேலும் திருவைகுண்டம், திருச்செந்தூர் மற்றும் ஏரல் பகுதிகளில் சுமார் 3500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மீட்கப்பட்டுள்ளனர். பகுதி சேதமடைந்த மீன்பிடி விசைப்படகுகள் 347 (161.415 இலட்சம்), முழு சேதமடைந்த நாட்டுப்படகுகள் 4 (4 இலட்சம்), பகுதி சேதமடைந்த நாட்டுப்படகுகள் 402 (119.07 இலட்சம்), சேதமடைந்த மீன்பிடி வலைகள் 3515 (527.25 இலட்சம்), சேதமடைந்த மீன்பிடி இயந்திரம் 3902 (292.65 இலட்சம்), சேதமடைந்த மீன் பண்ணைகள் 24.75 ஹெக்டேர் (2.475 இலட்சம்), சேதமடைந்த உள்நாட்டு மீனவர்களின் வலைகள் 850 (85 இலட்சம்) என மொத்தம் மொத்த 1191.86 இலட்சம் சேதார மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் இதுவரை 1,17,471 கால்நடைகள் சேதமடைந்துள்ளது. இதில் 3285 பசுக்களும், 1343 கன்றுகளும், 26469 ஆடுகளும் 85632 கோழிகளும், 524 பன்றிகளும், 49 கழுதைகளும், 60 எருமைகளும் 109 காளைகளும் அடங்கும். புதிதாக கால்நடைகள் வாங்குவதற்கு கடன்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இறந்த கால்நடைகளுக்கு நிவாரணமாக பசு, எருமைக்கு 37,500 ரூபாய் வரையிலும், ஆடு, செம்மறி ஆடு ஒன்றிற்கு 4,000 ரூபாய் வரையிலும் கோழி ஒன்றிற்கு 100 ரூபாய் வரையிலும் வழங்கப்படுகிறது. இதுவரை 534 இனங்களுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இனங்களுக்கு இரு தினங்களில் நிவாரணத் தொகை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ரதூத்துக்குடி தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அலுவலகத்தில் tnuwwb.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக உப்பளத் தொழில் செய்யும் 2023 ஆம் ஆண்டு பதிவு பெற்ற மற்றும் புதுப்பித்தல் செய்த உப்பளத் தொழிலாளர்களுக்கு அக்டோபர், நவம்பர், டிசம்பர் 2023ம் ஆண்டிற்கான மழைக் கால நிவாரணம் வழங்கும் பொருட்டு 5300 பதிவு பெற்ற உப்பளத் தொழிலாளர்களுக்கு ரூ.5000/வீதம் ரூ.2,65,00,000/ 22.12.2023 அன்று RECS மூலம் பணப் பட்டுவாடா செய்யப்பட்டது.

வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில் 19470 பாடப்புத்தகம், 6150 நோட்டு மற்றும் 531 பள்ளிச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில் அந்தந்த வட்டாட்சியர் அலுவலகங்களில் 29.12.2023 அன்று சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு மொத்தம் 607 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதில் 38 நபர்களுக்கு அன்றைய தினமே நகல் சான்றுகள் வழங்கப்பட்டன. வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில் 27.12.2023 முதல் 01.01.2024 வரை காப்பீடு நிறுவனங்கள் மூலம் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 1704 மனுக்கள் பெறப்பட்டு அதில் 265 மனுக்களுக்கு ரூ.19.82 இலட்சம் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அதிகனமழையினால் உயிரிழந்த 44 நபர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை 60 சமுதாய சமையலறைகள் மூலம் தினந்தோறும் 2 லட்சம் உணவு பொட்டலங்கள் மற்றும் போதுமான குடிநீர் வழங்கப்பட்டது.

பல்வேறு மாவட்டங்களில் இருந்து வரப்பெற்ற சுமார் 300 லாரிகளில் அத்தியாவசிய பொருட் களான அரிசி, பருப்பு, எண்ணெய், போர்வைகள், ஆடைகள், சுகாதாரப் பொருட்கள், சானிட்டரி நாப்கின்கள், மெழுகுவர்த்திகள் போன்ற நிவாரணப் பொருட்கள் மக்களுக்கு உடனடியாக விநியோகம் செய்யப்பட்டது. ஆவின் மூலம் இதுவரை பால் 1,93,634 லிட்டர், டெட்ரா பால் 14,340 லிட்டர் மற்றும் பால் பவுடர் 42,485 கிலோ விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 5 ஊராட்சி ஒன்றியங்களில் தேங்கியிருந்த மழைநீர் வெள்ளமானது பெரும்பான்மை பகுதிகளில் சுமார் 110 மோட்டார் பம்ப்புகள் மூலம் வேகமாக அகற்றப்பட்டது. மீதமுள்ள 36 குடியிருப்பு பகுதிகளில் 50க்கும் மேற்பட்ட மோட்டார் பம்ப்கள் மூலம் வேகமாக அகற்றப்பட்டு வருகிறது. வெள்ளத்தின் போது இறந்த கால்நடைகளின் உடல்கள் வேகமாக அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. 17,119 விலங்குகளின் உடல்கள் அப்புறப்படுத்தப்பட்டது. இவற்றில் 7,527 ஆடுகள், 1,936 மாடுகள் மற்றும் 7,656 இதர உயிரினங்களான கோழி, நாய் மற்றும் பன்றிகள் ஆகியவை தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை தூய்மை பணியாளர்கள் மற்றும் தூய்மை காவலர்கள் மூலம் அகற்றப்பட்டது. போர்க்கால அடிப்படையில் குப்பைகளை அகற்ற 2,562 தூய்மை காவலர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப் பட்டனர். அவர்களில் 592 நபர்கள் பிற மாவட்டங்களில் இருந்து தூத்துக்குடி மாவட்டத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

### 803 டன் திடக்கழிவுகள் இதுவரை அகற்றம்!

வெள்ளத்தின்போது தேங்கிய திடக்கழிவுகளை தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை தூய்மை பணி யாளர்கள் மற்றும் தூய்மை காவலர்கள் மூலம் சுமார் 803 டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டது. தூத்துக்குடி மாநகராட்சி வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து 4127 டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சிகளில் பாதிக்கப்பட்ட தெரு விளக்கு களின் எண்ணிக்கை 37,490 அவற்றில் 33,205 தெரு விளக்குகள் சரி செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களின் உடல் நலம் மற்றும் பொதுநலனுக்காக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மூலம் 201 வெள்ள நிவாரண மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தின் போது 123 கிராம ஊராட்சிகளில் உள்ள 727 குக்கிராமங் களில் மின்இணைப்பு பாதிக்கப்பட்டது. தற்போது அனைத்து கிராம ஊராட்சிகளிலும் முழுமையாக மின் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

ஊரக பகுதிகளில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்ட 87 குக்கிராமங்களுக்கு டிராக்டர் / லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதீத கனமழையின் காரணமாக தூத்துக்குடி மாவட்டத்தின் மாநில நெடுஞ்சாலைகளில் 112 இடங்களில் பலத்த பாதிப்பு ஏற்பட்டது. அவற்றில் 109 பகுதிகள் சரி செய்யப்பட்டுள்ளது. ஊராட்சிகளுக்குட்பட்ட சாலைகளில் 39 இடங்களில் பலத்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவற்றில் 33 சாலைகளின் பகுதிகள் சீர்செய்யப்பட்டுள்ளது. மின் வாரியத் துறை மூலம் மின் கம்பி (கி.மீ) 600 சேதமடைந்ததில் 580ம், விநியோக மின்மாற்றி 501 சேதமடைந்ததில் 475ம், மின் கம்பங்கள் 8465 சேதமடைந்ததில் 8210ம் சீரமைக்கப் பட்டுள்ளன. பொதுப்பணித் துறை மூலம் சேதமடைந்த 85 குளங்களில் 82 குளங்களும், 80 கால்வாய்களில் 65 கால்வாய்களும், ஆற்றங்கரைகளில் ஏற்பட்ட 2 உடைப்புகளும் சரி செய்யப்பட்டுள்ளன. போக்கு வரத்துத் துறை மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 302 வழித்தடங்களில் 270 வழித் தடங்கள் சீரமைக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 15 தண்ணீர் விநியோகம் செய்யப்படும் நிலையங்களில் 6 நிலையங்கள் பகுதியாகவும், 7 நிலையங்கள் முழுவதுமாக மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

### சாலைகள் – உடைப்புகள் உடனுக்குடன் சீரமைப்பு!

மாநகராட்சி, நகராட்சிகள், உதவி இயக்குநர், ஊராட்சிகள், உதவி இயக்குநர், பேரூராட்சிகள் மூலம் குடிநீர் விநியோகம் சீராக அளிக்கப்பட்டு வருகிறது. நெடுஞ்சாலைத்துறை மூலம் சேதமடைந்த 42 சாலைகளும், 112 உடைப்புகளும் சீர்செய்யப் பட்டுள்ளன. அதிகனமழையினால் தண்ணீர் தேங்கியுள்ள தூத்துக்குடி மாநகராட்சியில் 14 இடங்களிலும், ஊராட்சிகளில் 36 இடங்களிலும், பேரூராட்சிகளில் 5 இடங்களிலும், காயல்பட்டிணம் நகராட்சியில் 7 இடங்களிலும் தண்ணீர் அகற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட தொழில் மையம் மூலம் நீட்ஸ் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ் 32 பயனாளிகளுக்கு ரூ.2,13,591/ மதிப்பிலான மானியத்துடன் கூடிய ரூ.72, 84,261/ கடன் உதவிக்கான ஆணைகளையும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ் சமுதாய திறன் பள்ளி துவக்க நிதி மற்றும் இணை மானிய நிதி 10 ஊராட்சிகளுக்கு ரூ.27,07,759/க்கான நிதியினையும் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் கோ.லட்சுமிபதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி எஸ்.அமிர்தராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.அ.பிரம்மசக்தி, தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் ச.தினேஷ் குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி. ஜஸ்வர்யா ராமநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


## 47வது சென்னைப் புத்தகக் காட்சி

## “கலைஞர் கருவூலம்”

## விற்பனைக் கூடத்தில்

## தலைமைக் கழக வெளியீடுகள்

**47வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2024 ஜனவரி 3 முதல் ஜனவரி 21 வரை நடைபெறுகிறது.**

**புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 378ல் அமைந்துள்ள “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பம்மல் நல்லதம்பி

**சனவரி 5 (2016)**



**தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பகுத்தறிவுக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, 1963ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**ஒருங்கிணைந்த செங்கற்பட்டு மாவட்டத்தில், சைதை வட்டக் கழகச் செயலாளராக 1968 முதல் 1972 வரை கழகப் பணியாற்றியவர்.**

**பம்மல் பேரூராட்சித் தலைவராக இரண்டு முறையும் – பரங்கிமலை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவராகவும் – பம்மல் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**1980ல் கழகத்தின் சார்பில் தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக, நெருக்கடிகால மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# கலை உலகச் சூரியன் நீ!



சூரியனுக்குச் சூரியகாந்திப் பூவின் வணக்கம். சோழனுக்குப் பிசிராந்தையாரின் இதய முழக்கம்.என் தாய் தன் கருவறையில் இருந்து என்னைக் கழற்றிப் போடும்போது, இந்தத் தமிழ்ப் பூமியைத் தான் அறிமுகப்படுத்தினாள். என் தந்தை தமிழில் யோசிக்கச் சொன்னான். என் ஆசிரியன் தமிழை வாசிக்க சொன்னான். ஆனால், தலைவன் நீயோ …தமிழில் சுவாசிக்க அல்லவா கற்றுக் கொடுத்தாய்!

நான் விழாதபடி மொழி ஊன்றுகோல் தந்துதூக்கி நிறுத்தியிருக்கிறாய்! 'நான் மேடை ஏற இனம், மொழியின் இரத்தத்தைச் சேமித்திருக்கிறாய்! நான் நோயாளியாக மரணப்படுக்கையில் இருந்தாலும், உன் புத்தகம்தான் எனக்குச் செவிலித் தாயாகச் சேவை புரிந்திருக்கிறது. எனக்கு மனசுக்குள் வேர்க்கும் போதெல்லாம், உன் இலக்கியங்கள் தாம் விசிறி கொடுத்திருக்கின்றன. என்னை அந்நிய மொழி அம்மணப்படுத்தும் போது,நீ செந்தமிழில் தந்த மொழி யாடையானது மானம் காத்துக் கொண்டிருக்கிறது!

உன்னை எவர் சந்தித்த போதும், உன் எழுதுகோலைக் களவாட முடியவில்லை ஏன்?" காரணம், அது கர்ணனின் குண்டலத்தைப் போலத் தவத்தால் கைப்பிடித்துப் பிறந்தவன். நாள்தோறும் அது தமிழுக்கு இலக்கியச் சிகிச்சை செய்து கொண்டிருந்தது. தமிழனுக்கு வேற்று மொழித் தாகம் ஏற்படா வண்ணம் நோய்த்தடுப்பு ஊசி போட்டுக் கொண்டிருந்தது! தமிழ்த் தாய்க்கு மானம் காக்கும் சேலை நெய்து, கலிங்கத்துப் பரணி அல்லவா பாடிக் கொண்டு இருந்தது?… ஒருவேளை உன் எழுதுகோல் செய்திகள் தரும் வேலை நிறுத்தம் செய்திடுமானால்,… நாட்டின் பத்திரிகைகளெல்லாம், 'மாங்கல்யம் இழந்த கைம்பெண்கள் ஆகிவிட்டிருக்கும்! கருத்துப் பசி எடுத்துக் கதறல் ஒலியால் ஒப்பாரிக் காவியங்கள் பாடியும் வைத்திருக்கும்!

நீ இலக்கியங்களில் நல்லறங் காண எழுத்தாணியோடு இல்லறம் நடத்தியவன்.உன் பேனா ஆள வந்தார்களுக்கு. என்றுமே தலை குனிந்ததுமில்லை. வெண்சாமரம் வீசி வீழ்ந்ததுமில்லை!. சமுதாயச் சண்டை மூண்ட போதெல்லாம், சமாதானம் செய்யும் சாக்ரடிசாகச் சண்டமாருதம் கொட்டி இருக்கிறாய். அந்நாட்களில் ஏகாதிபத்திய சர்க்காரை உனது எழுத்தூசியானது இடுப்பொடித்து எதிரிகளுக்கே இனிப்பு வழங்கி உள்ளது. உன் வரலாற்றுப் புதினங்கள், தொலைந்து போன தமிழ்ச் சரித்திரங்களைத் தோண்டிக் கீழடி நாகரிகத்தையே அடையாளப்படுத்தியுள்ளன, அவை பொன்னோர் புவனத்தின் புதையலாக அல்லவா பேசப்படுகின்றன!.கால தேவனால் உறங்கிக் கொண்டிருந்த அவர்களை, நாயகன் நாயகியர்களாக உயிரூட்டித் தழுவி உலாத் தேர் ஏறிவரச் செய்திருக்கிறாய்!, நட்டுவம் போல் நடமாட விட்டு நாதக் கச்சேரி நடத்தி இருக்கின்றாய்!

உன் நாடகங்கள்,நாடக அரசியல்வாதிகளுக்கெல்லாம் சவுக்கடி கொடுத்திருக்கின்றன! நீ அண்ணா அறிவாலயம் வருவதை நிறுத்தியிருந்தால், ஆரியம் உனக்குப் பொற்கோவில் கட்டிக் கும்பிட்டிருக்கும்! 'நீ பேசாமல் இருந்தால் போதும்….. மதவாதிகள் உன்னைப் பொன் பல்லக்கில் உட்கார வைத்துப் பூமாரிப் பொழிந்து, உலா வந்திருப்பார்கள்!. ஆனால், நீயோ சூரியனுக்கும் சூரியன் அல்லவா? நீ மகுடங்களுக்கு மரியாதை தந்தவன் அல்லன்!. மனித தத்துவங்களுக்கும் மகுடம் சூட்டி இருக்கிறாய்.

தமிழே! தலைவா! உன்னை ஆராதிக்கிறேன்! தலைவனே, உன்னைப் படித்தவன் தமிழன் ஆகிறான்! உன்னை உணர்ந்தவன் ஞானி ஆகிறான்! உன்னை முற்றிலும் அறியாதவன் முட்டாள் ஆகிறான்!… உன் உழைப்பை பார்த்தவன் தியாகி ஆகிறான்…..நீ காலத்தால் இற்று விழாதவன்!. வரலாற்றால் முற்றுப்பெறாதவன்! நீ தமிழ் நேற்று!. தமிழர்களின் எஞ்சிய சொத்து! நீ பெரியாரின் வாரிசு என்பதால், நீ அண்ணாவின் தம்பி என்பதால் உன் வெற்றிடத்தை எவராலும் நிரப்ப முடியாது!…

கலை உலகச் சூரியனே! எங்கள் உயிரின் உயிரே! உன் எழுதுகோலில் அப்படி என்ன அதிசயத்தை அடைத்து வைத்திருந்தாய்!. உனது எழுதுகோலானது விரல் பல்லக்கில் ஏறி நடனம் ஆடிய போது, இலக்கிய அருவி அல்லவா கொட்டுகிறது! சூறாவளி சுழன்றடிக்கிறது!.இனிய தென்றல் குளிர்ச் சுகமாய்த் தீண்டுகிறது! எரிமலை சினமாய் வெடிக்கிறது; பூகம்பம் பூவாய்ப் பூக்கிறது! சிலர் எழுது கோலில் மையை ஊற்றி எழுதுகின்றனர்; சிலர் பொய்யை ஊற்றி எழுதுகின்றனர்; ஆனால், நீயோ சமூக நீதிக்காக உண்மை எனும் குருதியை அல்லவா ஊற்றி எழுதிக் கொண்டிருந்தாய்…!

உன் பொன் விரல்கள் தீண்டும் போது தான் எழுதுகோலுக்குப் பிரசவ வலி ஏற்படுத்தியது.நீயோ எழுத்துக்களின் உச்சியில் நின்றவன். உன் நாடகங்கள் நாட்டின் நலிவை நீக்கி இருக்கின்றன. அவை சமுதாய அவல அழுக்குகளைத் துவைத்துக் காயப் போட்டு இருக்கின்றன!. உனது எரிமலை எழுத்தில் பனி மலைகளும் சேர்ந்து குளித்து இருக்கின்றன! உன் காதல் மொழி கேட்டுச் சூரியனுக்கும் குளிரெடுத்து, அவ்வப்போது மேகப் போர்வையைப் போர்த்திக் கொண்டான்.

ஆன்மீகத்தையும், ஆத்மாவையும் பேசிக் கொண்டிருந்த திரை உலகில்,நீ நுழைந்தபோதுதான் பகுத்தறிவுக் கொடி பட்டொளி வீசிப் பறக்கத் தொடங்கிற்று! உன்னால் தான் திரைக் கொட்டகைகளில் சமூக நீதிப் பிரச்சாரமே தொடங்கி வைக்கப்பட்டது! மூடக் கொள்கைகள் பூத்துக் கிடந்த சமுதாயக் சாக்கடைகளை உனது எழுதுகோல் ஒன்றே வடிகாலாக ஆக்கி தந்தது!. அநீதி தோய்ந்திருந்த நாட்டின் குறுக்குச் சுவர்களைப் பெயர்த்தெறிந்தது! உனது மை ஊற்றுக்கோல் பெண்மைக்குக் கிரீடம் ஏற்றியதால், பெருமை சேர்த்துப் பெரியாரைப் பேச வைத்தது!

ஒளியற்று இருண்டு கிடந்த கல்விக்குக் கண் வழங்கியது. சனாதனச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்த சமுதாயத்தின் அடிமைத் தளையை அறுத்தெறிந்தது! 'சாதி, சமயத்தின் சல்லி, ஆணி வேர்களைக் கெல்லி எறிந்தது. காடுகளிலும், கழனிகளிலும் சந்தனச் சேறு பூசி உழைத்துக் கொண்டிருந்தவன்; புழுதி படிந்த தலைகளோடு ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தவன்; அழுக்கேறிய தழும்புகளோடு மூட்டை முடிச்சுகளைச் சுமப்பவன்; வண்டியிழுப்பவன்; ஆலைகளில் அடி நாக்கு வரள வியர்வை சிந்துபவன் ஆகியோரது…. நெஞ்சங்களை உனது எழுதுகோல் அறுவடை செய்து கொண்டிருந்தது! ஏன்? உட்பரிகையில் படுத்து உல்லாசம் கண்டவனுக்கும் உணர்ச்சி ஊசி போட்டு, உசுப்பி விட்டு விழிக்க வைத்திருக்கிறது.

உனது எழுதுகோல் ஒன்றுதான் அண்ணாவிற்குப் பிறகு, கோயில்களைத் தவறாகப் பயன்படுத்தும் கொள்ளையர்களைச் சுட்டிக்காட்டியது: களவு செய்பவனின் கைகளில் விலங்கு மாட்டியது! அது மட்டுமல்ல; குறட்டை விட்டுக் கொண்டிருந்த கோட்டைக் கொத்தளங்களுக்குச் சிறைச் சாலைக் கதவுகள் திறக்கவும் வேலை கொடுத்தது. இளைத்துக் கிடந்த இனத்திற்கு உனது எழுத்தூசி தான் சத்துணவு வழங்கியது! பெரியாரின் கசப்பு மருந்துகளையும், அண்ணாவின் இனிப்பு மாத்திரைகளையும் சேர்த்துக் சரியான கலவை ஆக்கித் தந்த சுயம்பு நீ! நாட்டில் மண்டி கிடந்த இருட்டடிப்பு ஒட்டடைகளை நீக்கிய உனது தூரிகை தான்; பகுத்தறிவு வெள்ளையடிக்கத் தொடங்கிற்று!.

கிராமப்புறத்தின் கண்களையும், காதுகளையும் திரையரங்கங்கள் பக்கம் திருப்பி விட்டவன் நீ! கிராமத்துக் கீற்றுக் கொட்டைகளில் கிழித்துத் தைத்த வெண்திரையில், உனது பெயர் பளிச்சிடும் போதெல்லாம்….. மானிடக் கரங்களுக்குச் சுகவலி ஏற்பட்டது! நீ தீட்டிய திரை வசனங்களை மனிதச் சாதி மந்திரமாகவே கருதி மனனம் செய்தது! உனது பேனாக்கிய வார்த்தை நளினங்களை உச்சரித்தவர்கள் தாம் திரைக் காவியங்களுக்காகத் தேர்வு செய்யப்பட்டனர்; உனது உரையாடல்கள் நடிகர் நங்கையர்களுக்கு நுழைவுத் தேர்வுப் பாடமாகவே வைக்கப்பட்டன!'

நீ திரைப்பட உலகின் சகாப்தம்! உனது திரைச் சிம்மாசனத்தில் எவரும் மாமன்னராக முடி சூட்டிக் கொள்ள இயலாது. நீ கலை உலகில் சிரஞ்சீவி! இராஜகுமாரியும், அபிமன்யும் உனது ஆற்றலை ஆதவன் போல் அடையாளம் காட்டின! பராசக்தியும், மனோகராவும், மலைக்கள்ளனும், புதுமைப்பித்தனும், திரும்பிப் பாரும், அரசிளம் குமரியும், அவன் பித்தனாவும், பூம்புகாரும், மறக்க முடியுமாவும், பாலைவன ரோஜாக்களும், நீதிக்குத் தண்டனையும், பாசப் பறவைகளும்,… இப்படியான 75 திரை ஓவியங்களைத் தந்து கலைத்துறைக்குத் தாய்ப்பாலின் அடர்த்தியாக மறைத் தீர்ப்பு வழங்கியவன்! இன்னும் அவை திரை உலகத்தின் வரலாற்றுக் காவியங்களாக வலம் வருகின்றன!


உன் சூரிய விரல்கள் செதுக்கிய உளியின் ஓசை இன்னும் சிரபுஞ்சி மழையாக இலக்கியம் படைத்து இருக்கிறது! பொன்னர் சங்கரின் மின்னல் வரிவாளிலும் உன் எழுத்துகள் கூர்மைப் பாய்ச்சுகின்றன! உன் ஒவ்வொரு திரைப்பட வருகையின் போதும், சிவப்புக் கம்பளம் விரித்துப் பட்டமளிப்பு விழா கொண்டாடிற்று. நீ தீட்டிய உரையாடல்களை உச்சரித்த பல நடிகர்களின் விலாசமும் விருதுகளும் பெற்றன! இயக்குநர்களோ மகுடம் சூட்டப்பட்டு மேடை ஏறினர்!

திரைப்பட உலகில் ஒரு புரட்சி நடிகரையும், ஒரு நடிகர் திலகத்தையும் கருவாக்கி தருவாக எழுந்து நின்றிட நியாய சபைகளைத் திறந்தவனும் நீ; உனது எழுத்து உரங்களால் அறிமுகப்படுத்திய அற்புதமான சாதனைப் படைப்பாளனும் நீ! இரவிவர்மாவின் தூரிகையாக மாறிய உனது கல்வெட்டு எழுத்துக்கள் தரம் பொன்னோவியமாக்கிப் பல திரைப்படங்களைச் சீதனமாகத் தந்திருக்கின்றன! அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி பாசுரங்களைப் போல, அடுக்கு மொழிகளால் ஆர்வலர்களை ஆட்கொண்டவன் நீ!அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர், சேக்கிழார் போன்றோர் வலம் வந்த திரைச்சீலையில்,நீ புகுந்த பின்தான், தந்தை பெரியாரும்,அறிஞர் அண்ணாவும், பகுத்தறிவுவாதிகளின் முழக்கங்களும் உன் திரைப்பட இராஜபாட்டையில் ஊர்வலம் வந்தனர்!உனது உரை வளத்தைக் கேட்டுக் கேட்டு உணர்ச்சிப் பெற்ற இளைஞர்க் கூட்டமோ, தமிழக வரலாற்றில் எழுச்சி கொண்ட ஒரு மொழிப் படையெடுப்பின் வரலாற்றை நடத்திக் காட்டிற்று!

இலக்கியங்களில் சிங்காரம் குலையாத திருக்குவளை மலர்ந்த சீர்திருத்தக் காரணி நீ! உனது எழுத்துப் போதையில் சொக்கிப் போன சூரியன், இரவு நேர ஆட்டங்களை வேவு பார்க்கத் தனது குடும்ப நிலாவையும் நட்சத்திரக் கூட்டங்களையும் திரையரங்குகளுக்கு அனுப்பி அன்றாடம் ஒற்றர் வேலை செய்து கொண்டிருந்தான்!உனது சாவாச் சரித்திரத்தை எந்த எழுது கோலாலும் திருத்த முடியாது! எதிரிக் கூட்ட எட்டப்பத் திருடர்களாலும் திருடவும் முடியாது! நீ சாதாரணமானவர்களையும் சரித்திரம் ஆக்கிக் காட்டியவன்! நீ ஊமையர்களைப் பேச வைக்க உதடுகள் நெய்தவன்!, நீ செவிடர்களுக்குச் செவிப்பறை சமைத்தவன்! உழைத்து, உழைத்து உருக்குலைந்து கிடந்த கிராமங்களுக்கு உனது கீர்த்திமிகு வசனங்களால் சீர்த்தி படைத்த பிரம்மா!

நீ மரணப் படுக்கையில் இருந்த வேளையிலும், அரசியல் அரங்கங்களை அரவணைத்தது போல, திரைத் துறையைக் கை விடாதவன்! நீ என்றும் எழுத்துக்களை கொண்டாடத் தவறியதில்லை. இரயில் பயண வேளையிலும், சிறைக் கொட்டடியில் கிடந்த போதும்,உன் எழுத்துச் சிறகுகள் சிகரங்களை தொட்டுப் பேசிக் கொண்டே இருந்தன. நீ கந்தக எழுத்துக்களையும், கற்பித்தவன்; கவிகுலுங்கும் கனிச்சாற்றையும் மொண்டு மொண்டு பருகத் தந்தவன்! உன் கலை உலகச் சிம்மாசனத்தை எவராலும் பறிக்கவும் முடியாது! பார் இயங்கும் வரை, பரிதி சுழலும் வரை எத்தனை அறிவியல் வந்தாலும், ஆர்ப்பரிக்கும் அலைகடல் பொங்கி மாற்றங்கள் நிகழ்ந்தாலும், சிகரம் தொட்ட உனது இமய இடத்தைப் பங்குப் போட முடியாது! உன் கலைப்பணிக்குப் பகுத்தறிவுச் சிங்கம் பட்டுக்கோட்டை அழகிரியால் வழங்கிய அஞ்சுக மொழிஅல்லவா… கலைஞர்! அதனை உன்னைத் தவிர, யாராலும் அடைமொழியாக அடைய இயலாது.

உன் ஒவ்வொரு தமிழனின் ஊனிலும், உயிரிலும் உறைந்து விட்ட நடைமொழி! காலக் கடலில் கரைந்து விடாத எங்களின் கலை உலகின் காவிய நாயகனே! நீ கலையைக் காதலிக்கத் தெரிந்தவன்!.. கலைக் காதலியால் என்றும் கைவிடப்படாத காதலன் நீ! கலை உலகச் சூரியனே! நீ வாழ்க! வாழ்க!..



**கவிஞர் தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக் குழுத்தலைவர்




தமிழ்நாடு ஒருங்கிணைந்த இசை வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு துவக்கவிழா நல்லி குப்புசாமி தலைமையில் சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள முத்தமிழ்ப் பேரவை திருவாவடுதுறை டி.என்.இராஜரத்தினம் நினைவரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி., திறந்து வைத்தார். இதில் இசைவேளாளர் முற்போக்கு நலச் சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### சிவகங்கை மாவட்டம் –

## திருப்பத்தூரில் 361 மாணவர்களுக்கு ரூ.17 லட்சத்தில் விலையில்லா மிதிவண்டிகள்!

### அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

சிவகங்கை, ஜன. 5 - சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் நாகப்பா மருதப்பா பெண்கள் அரசு மேல்நிலைப் பள்ளியில் முதல்வரின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது. கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் 361 மாணவிகளுக்கு 17 லட்சத்து 18 ஆயிரம் மதிப்புள்ள மிதி வண்டிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். சிவகங்கை மாவட்டத்தில் இந்த ஆண்டு 11,381 மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட உள்ளது. சென்ற ஆண்டு 68 அரசுமேல்நிலைப்பள்ளிகள், 105 அரசு உதவி பெறும்பள்ளிகள் ஆகமொத்தம் 223 பள்ளிகளுக்கு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலமுத்து முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் திருப்பத்தூர் பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், பேரூர்ச் செயலாளர் ஆர்.கார்த்திகேயன், ஒன்றியச் செயலாளர்கள் குன்னக்குடி சுப்பிரமணியன், விராமதி மாணிக்கம், மாவட்ட சிறுபான்மை அமைப்பாளர் என்.எம். சாக்ளா, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், ஒன்றியப் பொருளாளர் ஏ.எம். கண்ணன், திருப்பத்தூர் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் கான்முகமது, புதூர் கண்ணன் ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், நிர்வாகிகள் ராம.ரவி, ஷாஜகான், பேரூராட்சி மன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி, மனோகரன், காளிமுத்து உட்பட ஏராள மானவர்கள் கலந்து கொண்டனர்.

### பிளஸ் 2 தேர்வில் 600/600 மதிப்பெண் பெற்ற கட்டுமானத் தொழிலாளி மகள்

## நந்தினிக்கு சிறப்பு ஊக்கத்தொகை ரூ.3 லட்சம்!

### அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார்!

சென்னை, ஜன. 5 - தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில், திண்டுக்கல் மாவட்டத்தில், பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி சரவண குமார் ஆவார். அவரது மகள் செல்வி. நந்தினி 2022-2023 ஆம் கல்வி ஆண்டில் பிளஸ் 2 தேர்வில் 600/600 மதிப்பெண் பெற்று சாதனை படைத்துள்ளார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி செல்வி.நந்தினிக்கு புத்தக செலவு, தனிப்பயிற்சி (Special Tuition). உடை, போக்குவரத்து உள்ளிட்ட இதர வாழ்வாதார செலவினங்களுக்கு ரூ.3, 00,000/ (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) சிறப்பு ஊக்கத் தொகையாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரிய நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (03.01.2024) தலைமைச் செயலகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் அவர்களும் செல்வி.நந்தினிக்கு சிறப்பு ஊக்கத் தொகை ரூ.3,00,000/ க்கான காசோலையினை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் திருமதி ஆர். செந்தில்குமாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மக்கட்தொகை கணக்கெடுப்பு இயக்குநரக ஊழியர்களுக்கு

## தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் பேச்சுத் தமிழ் பயிற்சி!

சென்னை, ஜன. 5 - தமிழ் இணையக் கல்விக் கழகம், தமிழ்மொழி மற்றும் பண்பாட்டுப் பரப்புரை திட்டத்தின் ஒரு பகுதியாக, பேச்சுத் தமிழ் வகுப்புகளை வழங்கி வருகிறது. குறிப்பாக, ஒன்றிய அரசுப் பணியாளர்கள், வங்கி ஊழியர்கள், பிற மாநிலத் தொழிலாளர்கள் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு புலம் பெயர்ந்தோருக்கு இந்தி வழியில் பேச்சுத் தமிழ் கற்றுத்தரப்படுகிறது.

இதற்காக, இந்திவழிப் பேச்சுத் தமிழ் பாடத்திட்டம் வகுக்கப்பட்டு, அப்பாடங்கள் 14 காணொலிகளாக உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது இத்திட்டம், மக்கட்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தில் பணிபுரியும் வெளி மாநில ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இப்பணியாளர்கள் கணக்கெடுப்பின்போது சரியான தகவல்களைப் பெறவும், புதிய சூழலுக்கு ஏற்ப தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவும், அவர்களின் அன்றாட வாழ்க்கையைச் சுமுகமாக நடத்திச் செல்லவும் தமிழ்மொழியை அவர்கள் பேசக் கற்றுக் கொள்வது இன்றியமையாததாகும்.


இதுதொடர்பாக, இந்தப் பயிற்சியின் முதல் குழுவுக்கான வகுப்பு இராஜாஜி பவனில் உள்ள தமிழ்நாடு மக்கட்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தில் நேற்று முன்தினம் (3.1.2024) நடைபெற்றது.

இவ்வகுப்பினை மக்கள்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தின் இயக்குநர் சஜ்ஜன்சிங் ஆர் சவான், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் உதவி இயக்குநர் திருமதி இரா. மதுரா மற்றும் உயர் அலுவலர்கள் ஆகியோர் தொடங்கி வைத்து உரையாற்றினர். இப்பேச்சுத் தமிழ் பயிற்சியானது இணையவழியாக நடத்தப்படும். 2 மாத கால அளவிலான இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கும் பங்கேற்பாளர்களுக்குத் தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பேச்சுத் தமிழ் பயிற்சி தொடர்பாக மேலும் விவரங்களுக்கு tva@tn.gov.in, tpktva@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நத்தம் அ. இராசாமணி**
**சனவரி 5 (2016)**



திராவிடர் கழகத்தில் தனது 14வது வயதில் சேர்ந்து, அதன்பின்னர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், தளபதி மு.க.ஸ்டாலின் ஆகியோருடன் பழகும் வாய்ப்பைப் பெற்று நத்தம் ஒன்றியக் கழகத் துணைச் செயலாளராகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


கலைஞர் 100
1924 - 2023
மழை வெள்ளத்தால் தத்தளித்த மக்கள் - உன்
அன்பு வெள்ளத்தால் கரை சேர்ந்தனர்.
பேய் மழையில் தவித்திட்ட மக்களை - உன்
தாயன்பு காட்டியே அரவணைத்தாய்.
கனிக்கு பிறந்தநாள்
அல்ல... அல்ல...
கருணைக்கு பிறந்தநாள்
வாழ்க நீ பல்லாண்டு!
மாநில தி.மு.க. மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரக்குழு,
சமூக வலைதளக்குழு, ஆலோசனைக்குழு


05.01.2024 வெள்ளிக்கிழமை பிறந்தநாள் காணும்
கழக துணை பொதுச் செயலாளர்
தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர்
மதிப்புமிகு அக்கா
கனிமொழி கருணாநிதி MP.,
அவர்களை வாழ்த்தி இந்நன்னாளில் நலத்திட்ட உதவிகள்
பாபா குருகுலத்தில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு மூன்று
வேளை அறுசுவை உணவு மற்றும் பொழிச்சலூர் ஊராட்சியில்
நிவாரண பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கும் விழா
மாண்புமிகு குறு-சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்
தா.மோ.அன்பரசன்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்
இ.கருணாநிதி MLA.,
காஞ்சி வடக்கு மாவட்ட கழக து.செயலாளர்
பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர்
குமரி விஜயகுமார்
தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய தலைவர்
ஜி.கே.விவேகானந்தன் (எ) ரவி
புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர்
மற்றும் அனைத்து கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு
விழாவினை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.....
என்றும் அன்புடன்
பா.வனஜா தயாளன் M.A.,M.Phil.,
பொழிச்சலூர் ஊராட்சி மன்றத் தலைவர்
பொழிச்சலூர் ஊராட்சி தி.மு.க

# திராவிட சினிமா

39

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

## எம்.ஜி.ஆர். எனும் திராவிட எதிர் நாயகன்-2

■ வீ.மா.ச.சுபகுணராஜன்







படங்கள்-உதவி-:-ஞானம்



அண்ணாவின் 'இதயக்கனி' எம்.ஜி.ஆர் என்ற, உருவக அரசியலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோற்றுவாயின் மூல ஆதாரப் புனைவு. அதற்கான ஆதாரமாகச் சொல்லப்படும் செய்தி ஒன்று உண்டு. ஆம், அண்ணாவின் பிரபலமான கூற்றான 'தம்பி, உன் முகத்தை மட்டும் காட்டு போதும்' என்பது. 1967 ஆம் ஆண்டு தேர்தலின் போது அண்ணா அப்படிச் சொன்னார்.

எனது நோக்கம், அந்தக் கூற்றை ஏன் அண்ணா சொன்னார் என்பதை ஆய்வதுதான். பேசிப் பேசியே ஆட்சியைப் பிடித்தவர்கள் எனப் பெயர் பெற்ற இயக்கத்தின் நிறுவனத் தலைவர் அப்படிச் சொல்ல இரண்டு காரணங்கள் இருக்கலாம். முதலாவது முக்கியமான காரணம், அந்த நேரத்தில் எம்.ஜி.ஆர் குண்டடிபட்டுச் சிகிச்சையில் இருந்ததால் 'பேசும் நிலையில்' இல்லை என்பது. அவர் மருத்துவமனையில் கழுத்தில் கட்டுடன் அமர்ந்திருக்கும் புகைப்படத்தை தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர், குறிப்பாக எம்.ஜி.ஆர் ரசிகர் மன்றத்தினர் ஒட்டியிருந்தனர். அந்தச் சூழலில்தான் அண்ணா இப்படிச் சொன்னார்.

ஆனால், அதன் பொருட்டு மட்டும் அண்ணா அப்படிச் சொல்லவில்லை என்பதே எனது பார்வை. அண்ணாவின் மேதைமையை விளக்க வேண்டிய தேவையில்லை. பதினெட்டு ஆண்டுகளில், இளைஞர்களாலான முன்னணித் தலைவர்களைக் கொண்டு ஒரு மாபெரும் வெகுமக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்பிட பொருள் வளமோ, இன்ன பிற வெகுமக்கள் அரசியலுக்கான பின்புலமோ அற்ற எளிய மனிதர் அண்ணா. அவரது அறிவாற்றல்தான் அவரது மூலதனம். அவருக்குக் கட்சியின் பல்லாயிரம் தன்னலமற்ற தொண்டர்களை அவரவர் தளத்தில் கையாளும் நுட்பம் தெரிந்திருந்தது. தன் கண் முன்னால் வளர்ந்து வந்த எம்.ஜி.ஆரையும் அவர் எப்படித் துல்லியமாகக் கணிக்கத் தவறுவார்?

### விளம்பரப் பதாகை

அண்ணா, எம்.ஜி.ஆருக்காகக் கடைசியாக, 1961 ஆம் ஆண்டில் 'நல்லவன் வாழ்வான்' எனும் கதையை எழுதினார். இளகிய மனம் கொண்டவரானாலும் தெளிவான, கறாரான அரசியல் பார்வையில் எம்.ஜி.ஆர் குறித்த ஆழமான பார்வையை, புரிதலை அண்ணா உருவாக்கிக் கொண்டிருந்தார். மக்களை ஈர்க்கும் வகையில் தன்னை ஒரு 'நல்லவர், வல்லவர்' எனும் அசைக்க முடியாத 'பிம்பத்தில்' நிலைநிறுத்திக் கொண்டு விட்ட எம்.ஜி.ஆர்., அண்ணாவின் அனுமானத்தில் 'ஒரு முகம்' மட்டுமே. ஆம், நல்லவர் வல்லவர் எனும் 'முகம்', அதைக் கடந்து சொல்ல சீர்திருத்தக் கருத்துகளோ, செய்திகளோ அறவே இல்லை.

ஏனெனில், அவர் கட்டமைத்த பிம்பம் 'பொதுவான நல்லவன்' என்பது மட்டுமே. திராவிட இயக்கச் சிந்தனைகளை அவ்வப்போது, எழுதிக் கொடுத்தபடி நாயகனாகப் பேசத் துணிந்தவர்க்கு, 'கடவுள் மறுப்பு', 'திராவிடம்', 'பகுத்தறிவு' மற்றும் பெண்ணுரிமை போன்ற தளங்களில் தீராத ஒவ்வாமை நிலவியது. சமூகநீதி நிலைப்பாட்டைக் கூட திராவிட மூலத்தின் மீதன்றி, இந்திய தேசியம் மற்றும் காந்தியத்தில் நிலை நிறுத்தியவர். எனவேதான் அண்ணா எம்.ஜி.ஆரை அவரது கருத்தியல் சார்ந்து ஏற்காமல், ஒரு ஜோடனையான நல்லவர், 'கட் அவுட்' அல்லது 'முகமூடி' எனும் அளவில் பயன்படுத்திக் கொண்டார். ஆம், எம்.ஜி.ஆர். ஒரு வகையில் 'தானே திட்டமிட்டு கட்டமைத்துக் கொண்ட விளம்பரப் பதாகை' மட்டுமே.

> **பதினெட்டு ஆண்டுகளில், இளைஞர்களாலான முன்னணித் தலைவர்களைக் கொண்டு ஒரு மாபெரும் வெகுமக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்பிட பொருள் வளமோ, இன்ன பிற வெகுமக்கள் அரசியலுக்கான பின்புலமோ அற்ற எளிய மனிதர் அண்ணா.**

இந்த பிம்பத்தை எதுவரை நீட்டிக்க முடியுமென்பதற்கான சாத்தியங்களைத் தி.மு.க.வினர் அண்ணாவுக்குப் பின்னரும் தொடர்ந்தனர். இது ஒரு வகையில் எம்.ஜி.ஆரின் 'பிம்பப் பொறி'யைப் பிற கருத்தியலாளர்களும் தவிர்த்து விட முடியவில்லை என்பதற்குச் சாட்சி என்பேன்.

### அசலும் நகலும்

எம்.ஜி.ஆர் பிம்பம் குறித்த ஆய்வில் மிக முக்கியமான பேசுபொருள், அவரைத் தொட்டுப் பார்த்துவிட வேண்டுமென்ற வேட்கை. அதையே ஒரு காட்சியாக அமைத்திருக்கும் 'எங்கள் தங்கம்' (1970) திரைப்படம். அது ஒரு நுட்பமான காட்சியமைப்பு.

1969 ஆம் ஆண்டில் கலைஞர் தலைமையில், தி.மு.க. ஆட்சியில் அமைச்சராக விரும்பிய எம்.ஜி.ஆர்., தனது சினிமா நடிப்பையும் தொடர விரும்பினார். இதற்கு அரசியல் சாசன அனுமதி இல்லையென்ற விளக்கம் அவரை ஆறுதல்படுத்தவில்லை. அநேகமாக அந்த நேரத்திலிருந்து தானே கட்சி மற்றும் ஆட்சித் தலைமை ஏற்க வேண்டும், கூடுதலாக, திரைப்படங்களிலும் நடித்திட வேண்டுமென்ற திட்டம் உருவாகியிருக்கலாம். இது ஆதாரமற்ற அவதூறு அல்ல. அவர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகும் தொடர்ந்து சினிமாவில் நடிக்க ஆளுநரிடம் அனுமதி கோரினார் என்ற ஆதாரம் உள்ளது.

கூடுதலாக, விஜயா பிக்சர்ஸ் நாகிரெட்டி அவர்கள் 'நம் நாடு' (1969) படம் வெளியீட்டு நாளில் அவருக்கும் எம்.ஜி.ஆருக்குமிடையே நடந்த உரையாடல் குறித்த பதிவும் மிக முக்கியமானது (இதைப் பின்னர் விரிவாகப் பேசலாம்). ஆனால் 1970 ஆம் ஆண்டில் கட்சிப் பொருளாளர் பொறுப்பும், அரசுப் பதவியாக, சிறுசேமிப்புத்துறை துணைத் தலைமைப் பொறுப்பும் எம்.ஜி.ஆருக்கு வழங்கப்பட்டன. 'எங்கள் தங்கம்' மேகலா பிக்சர்ஸ் தயாரிப்பில் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா நடித்து முரசொலி மாறன் அவர்கள் திரைக்கதை வசனத்தில், கிருஷ்ணன் - பஞ்சு இயக்கத்தில் உருவானது.

படத்தின் தொடக்கக் காட்சியில் சிறுசேமிப்பு தொடர்பான அரசு நிகழ்ச்சி ஒன்றில், பங்கேற்க எம்.ஜி.ஆர். வருவார். வரவேற்புரையாற்றும் நிகழ்ச்சி அமைப்பாளர் முரசொலி மாறன், 'மக்களின் இதயக்கூட்டில் அன்றும் இன்றும் குடியிருக்கும் 'புரட்சி நடிகர்' எம்.ஜி.ஆர்' என அவரை வரவேற்பார். சிறுசேமிப்பு பற்றி ஒரு சிறிய உரையாற்றி அமர்வார் 'அசல்' எம்.ஜி.ஆர். இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது கதையின் நாயகனும் எம்.ஜி.ஆர். தான். அவரும் அரங்கில் அமர்ந்திருப்பார். அவரது நண்பனான சோ ராமசாமி, எம்.ஜி.ஆர் மேடைக்கு வந்ததும் ஓடிச் சென்று அவரை 'தொட்டுப்' பார்ப்பார். கன்னத்தைத் தடவுவார். அதை மேடையிலிருப்பவர்களும், அரங்கத்திலிருக்கும் நாயகப் பாத்திரமேற்றிருக்கும் எம்.ஜி.ஆரும் பார்த்து ரசிப்பார்கள்.

அடுத்து 'அசல்' எம்.ஜி.ஆரும் 'நகல் / நடிகர்' எம்.ஜி.ஆரும் மேடையில் சந்தித்துப் பேசுவார்கள். சற்று முன்னர் தொட்டுத் தடவி காட்சிப்படுத்தப்பட்ட பிம்பமயமான அசலும், நடிகரான நகலும் சந்திக்கும் இந்தக் காட்சி திரைவெளியில் அபூர்வமானது. ஒரு குறியீட்டுக் காட்சி. காட்சியின் நோக்கமும் அது கடத்தும் செய்தியும் பல்தள வாசிப்புச் சாத்தியம் கொண்டவை.

(திராவிட எதிர்நாயகத்துவம் தொடரும்).

...படம் விரியும்

---

## ரவீந்திரரின் பன்முகம் அறிய...




19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரையிலான காலத்தைத் தனது எழுத்துகளாலும் ஓவியங்களாலும் தீட்டியவர் வங்கத்துக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர். இந்தியா மற்றும் வங்க தேசத்துக்கான தேசிய கீதங்களை இயற்றியவர், நோபல் பரிசு வென்றவர் என்ற பல பெருமைகளுக்குரிய இவரது சில படைப்புகள், பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியிருக்கின்றன. ஆனால், அவை கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல்கள், சிறார் இலக்கியம் எனப் பல வடிவங்களில், தனித்தனிப் புத்தகங்களாகக் கிடைக்கின்றன.

முதன்முறையாக அவர் புழங்கிய ஒவ்வொரு வடிவத்திலிருந்தும் மிகச் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து, சுமார் 800 பக்கங்களில் ஒரே நூலாக அவருடைய எழுத்துகளை 'தி பெஸ்ட் ஆஃப் தாகூர்' என்ற தலைப்பில், ஆங்கிலத்தில் வெளிக்கொண்டு வந்திருக்கிறார் எழுத்தாளர் ருத்ராங்ஷு முகர்ஜி. 1861 முதல் 1941 வரையிலான ரவீந்திரநாத் தாகூரின் வாழ்வில் நடந்த முக்கியமான நிகழ்வுகளைத் தொகுத்து, சுவாரசியமான முன்னுரையையும் ருத்ராங்ஷு முகர்ஜி கொடுத்திருக்கிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட தமிழ் எழுத்தாளர்களின் சிறந்த பல வடிவ படைப்புகள் ஆங்கிலத்தில் இவ்வாறு ஒரே நூலாகத் தொகுக்கப்பட்டால், தமிழ் இலக்கியத்துக்கு உலக அங்கீகாரம் நிச்சயம்..!

---

## ஃப்ளாஷ்பேக்





வீரவிஜயன்

### நண்பர் இல்லத்தில் கலைஞர்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அவர் சொந்த ஊரான திருக்குவளைக்கு வருகை தந்தார். அப்போது, அவருடன் இளம் வயதில் திராவிட இயக்கச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பிய என் தந்தை தியாகராஜன் அவர்களை எங்களுடைய இல்லத்தில் சந்தித்தார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

**-தி.வீரவிஜயன்,
புலிவலம், திருவாரூர்.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

---

## கருவூலம்


### சிம்மாசனத்தில் கலைஞர்!

**1971 ஆம் ஆண்டு நவம்பர் 4 ஆம் தேதி சேலத்தில் தந்தை பெரியாருக்கு வெள்ளி சிம்மாசனம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நேரு விளையாட்டரங்கில் அமைச்சர் ராஜாராம் தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில், பெரியாரை முத்தமிழறிஞர் கலைஞர் வெள்ளிச் சிம்மாசனத்தில் அமர வைக்கிறார். பெரியாரோ உடனே எழுந்து, கலைஞரை இழுத்து வெள்ளிச் சிம்மாசனத்தில் அமர்த்தினார். கூடியிருந்த மக்களும் தொண்டர்களும் நெஞ்சம் விம்ம, கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக ஆரவாரமிட்டனர்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

350




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.